# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் 114 இதழ் 17   8-7-1988   (யூலை8-யூலை15)   பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



சந்தா

பாதுகாவலன் பத்திரிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டுக்கான சந்தா ரூபா 75/- மட்டுமே. ஐரோப்பிய நாடுகளுக்குஒரு ஆண்டுசந்தா 15£. அமெரிக்கா, கனடாவுக்குஒருஆண்டு சந்தா 30 U. S. $. பாதுகாவலன், அஞ்சல் பெட்டி2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நீங்கள் பணத்தை அனுப்பினுல் வாரம்தவருது பத்திரிகை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.


### திருச்சபையின் கட்டளையை பேராயர் மீறியதால் திருவருட்சாதனங்களை அணுகமுடியாமல் தடை.

# பேராயர் லெஃவேபரும் 4 புதிய ஆயர்களும் திருச்சபையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர்

**திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் கட்டளையை மீறி இம் மாதம் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை 82 வயதான பிரெஞ்சு பேராயர் மார்ஷல் லெ.ஃ.வேபர் நான்கு புதிய ஆயர்களைச் சுவிற்சர்லாந்தில் திருநிலைப் படுத்தியதனுல் இம்மாதம் 3ஆம் திகதி அவரும் நான்கு புதிய ஆயர்களும் அதிகாரபூர்வமாகத் திருச்சபையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர்.**

திருச்சபையின் தடையை மீறி நான்கு புதிய ஆயர்களைத் திருநிலைப் படுத்தியதால் பேராயர் லெஃவேபர் திருச்சபையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளார். பிற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்த காரணத்தால் 1976ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால் தடைசெய்யப்பட்ட பிரெஞ்சு பேராயர் மார்ஷல் லெஃவேபர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்துக்குப் பிறகு (1962-65) திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சிகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். பழைய மரபான, திருச்சபையால் கைவிடப்பட்டலத்தீன் திருப்பலியை அப்படியே நிறைவேற்றி வந்தார். பழமையை விரும்பிய சில கத்தோலிக்கர் அவரைப் பின் பற்றினர். அவர் தாமே ஐந்து குருமடங்களை நிறுவி இதுவரை 200க்கும் மேற்பட்ட குருக்களைத் திருநிலைப்படுத்தியுள்ளார். அவர் தடைசெய்யப்பட்ட நாளிலிருந்து அவரது திருநிலைப்படுத்தல்கள் சட்டவிரோதமாயிருந்த போதிலும் (Illicit) அவரால் திருநிலைப் படுத்தப்பட்ட குருக்கள் தகுதியுள்ள குருக்களாகவே (Valid) இருந்தனர்.

சென்ற மாதம் அவர் நான்கு ஆயர்களைத் திருநிலைப்படுத்தப் போவதாக அறிவித்த போது திருத்தந்தை அவரைத் திருச்சபையிலிருந்து விலக்கி வைக்கப் போவதாக எச்சரித்தார். எனினும் அவர் அந்த எச்சரிக்கையையும் மீறி ஆயர்களைத் திருநிலைப்படுத்திஞர்.

### அருட்சகோதரர் சாமிநாதர் C. R.

## இறைபதமடைந்தார்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்தவரும் யாழ். அருள் ஆச்சிரமத்தில் வாழ்ந்தவருமாகிய அருட்சோதரர் S. அமிர்தநாதர் C. R. அவர்கள் தமது 80வது வயதில் இறைபதம் எய்திஞர்.

அன்னரின் பூதவுடல் 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிவரை யாழ். அருள் ஆச்சிரமத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின் தோலகட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டது அங்கு 3-7-88 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆயரின் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.



ஆனி 30ஆம் திகதி மாலை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் பிதா. சந்திரா பெர்னுண்டோவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபோது அங்கு குழுமியிருந்த திரளான குருக்களும் மக்களும்.

## தலைமன்னுர் பங்கில் மறுவாழ்வுப் பணிகள்

கடந்த 85ம் ஆண்டு மாசித் திங்களில் தலைமன்னுர் மேற்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அகதிகளாக இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தனர். நாய்கள் கூடப் பட்டினியாக வாழ்ந்த இந்தக் கிராமத்திற்கு மூன்று மாதங்களின் பின் படிப்படியாக மக்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். தற்பொழுது இலங்கை—இந்திய உடன்பாட்டின் பின் இக்கிராமத்து மக்கள் அனைவருமே வந்து சேர்ந்து விட்டனர். வீடுகள் இல்லாமலும், தொழில் துறைகள் இல்லாமலும் தவித்த மக்களுக்கு பங்குத்தந்தையான அருள் திரு மொன்போட் அடிகளாரின் முயற்சியாலும் வாழ்வோதயம், மன்னுர் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கங்களின் அனுசரணைகளாலும் இக்குறைபாடுகள் நீங்கி வருகின்றன. யாழ். அகதிகள் புனர்வாழ்வு சங்கமும் மன்னுர் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கமும் இணைந்து நோர்வே நாட்டின் உதவியுடன் இப்பகுதி மக்களில் நான்குபேர் சேர்ந்த ஐம்பது குழுக்களுக்கு போட், என்ஜின், தேவையான வலைகள் அனைத்தும் சமீபத்தில் வழங்கியுள்ளன. இவற்றின் மொத்தப்பெறுமதி ஐம்பது லட்சம் ரூபாவாகும். உதவிபெற்றவர்களின் ஊக்கமும் ஆக்கமும் இருந்தால் தான் வேறு கிராம மக்களும் இப்படியான உதவிகள் பெற முடியுமெனப் பொருட்களின் கையளிப்பு வைபவத்தில் பங்குபற்றிய சங்கத்தின் தலைவரும் மன்னுர் மறைவட்டகுரு முதல்வருமான அருள்திரு. சேவியர்குருஸ் அடிகளார் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். அடுத்ததாக வாழ்வோதயம் தலைமன்னுருக்கெனத் தீர்மானித்த வீட்டுத் திட்டத்தின் ஏழு வீடுகளின் வேலைகள்நடைபெற்று வருகின்றன. மேலும் வீடு, கல்வி போன்றவற்றிற்கு வாழ்வோதயம் உதவ முயற்சி செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல்: P. எமிலியான்
தலைமன்னுர்

### கொட்டாஞ்சேனை லூசியாஸ் பங்கில்

## அடிப்படை குடும்பச் சங்கம்

அண்மையில் கொட்டாஞ்சேனை பேராலயத்தில் அமைக்கப்பட்ட அடிப்படை குடும்ப சங்கம் சிறந்த பணி புரிந்துவருகிறது. மிகப் பெரிய இந்தப் பங்கில், பல்வேறு வாழ்க்கைத் தரங்களிலுமுள்ள மக்களை ஒன்றுசேர்த்து, வகுப்பு பேதத்தை ஒழிப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

30 வயதுக்கு மேற்பட்டவரே இச்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். தனிக் குடும்பங்களிலும் பங்கிலும் குடும்ப உறவை வளர்ப்பதே இதன் திட்டமாகும். தங்கள் மாதாந்தக் கூட்டத்தில் பொதுப்பிரச்சினைகள் பற்றியே அதிகமாக உரையாடினுலும் இறுதியில் ஒரு உருப்படியான செயற்றிட்டம் உருவாக்கப்படுகிறது.

மாதத்தின் முதற்சனியன்று இக்குழு செபியில் கூடி செபமாலை செபித்து தமது ஊழியங்களுக்கு வேண்டிய ஆன்ம சக்தியைப் பெற்றுக்கொள்ளுகிறது. இவர்கள்மேற்கொண்ட ஒரு முயற்சி சிங்கள-தமிழ் புத்தாண்டின்போது நடத்தப்பட்ட ஒரு இசை விழாவாகும்.

படிப்படியாக இச்சங்கத்தை விஸ்தரித்து ஒவ்வொரு குடும்பத்திலுமிருந்து ஒரு அங்கத்தவராவது இக்குழுவில் இடம் பெறச் செய்வது இவர்களது நோக்கமாகும்.

## யாழ். கொமிற்சிய வெளிவிழா

கடந்த பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகள் காரணமாக இடம் பெற முடியாமற்போன மரியாயின் சேனையின் வெளிவிழாவானது இம் முறை மரியன்னையின் அருளால் கடந்த 18-6-88 இல் சிறப்பாக நடந்தேறியது.

யாழ். கொமிற்சிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் விழாவில் 28 பிரசீடியங்களிலிருந்து 250க்கும் மேற்பட்டோர் மகிழ்ச்சியோடு பங்கு கொண்டார்கள்.

(மேலதிக விபரம் தொடரும்)

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# எம்கருத்து

## எதிர்நீச்சல்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு நிறைவுற இரண்டு வாரங்கள் உள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்தான நாளிலிருந்து இந்திய அரசும், இலங்கை அரசும், இயக்கப் போராளிகளும் எதிர்நீச்சல் போடுவதிலேயே ஓராண்டு உருண்டோடி விட்டது. எதிர்நீச்சலே வாழ்க்கையாகி விட்டது.

இவ் ஒப்பந்தம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்ருக இருந்திருந்தால் இந்திய அமைதிப்படை கனரக ஆயுதங்களுடன் இங்கு வந்திருக்க மாட்டாது. ஒப்பந்தம் ஏற்பட்டதும் அமைதி வந்துவிட்டது என்று அகமும் முகமும் மலர்ந்த மக்கள் கனரக ஆயுதங்களைக் கண்டு அதிர்ந்து போனது எமது மனக் கண்களைவிட்டு அகலவில்லை. ''எதற்காக இவை ?'' என வினவியவர்கள் விடையை அனுபவ வாயிலாகவே பெற்றுவிட்டார்கள்.

இந்திய அரசு இலங்கை அரசையும், தமிழ் மக்களையும் திருப்திப்படுத்த முடியாது எதிர்நீச்சலடிக்கிறது. இலங்கை அரசு சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியாத நிலையில் ஒப்பந்தத்தை அமுலாக்க எதிர்நீச்சல் அடிக்கிறது. இயக்கப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகள் இவ் ஒப்பந்தம் நம் மீது திணிக்கப்படும் அரைகுறைத் தீர்வு என்று அதற்கும் அதிகமாகப் பெற்றுக்கொள்ள எதிர்நீச்சல் அடித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த மும்முனை எதிர்நீச்சல்களால் அல்லல்பட்டு விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்ட நிலையில் புலிகளை அழித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என திடீர்த் தீர்மானங்கள் பல்வேறு வட்டாரங்களிலும் மேற்கொள்ளப்படுவது இயற்கை. ஆனுல் எவ்வளவு விரைவாக இத் தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறதோ, அவ்வளவு விரைவாக அது கைவிடப்படுவதே நாம் காணும் காட்சி.

இந்தியத் தளபதி சிர்தேஷ் பாண்டே ''90% மக்கள் விடுதலைப் புலிகளுடன் இருக்கிருர்கள்'' எனப் புதுடில்லியில் கூறியுள்ளார். கடைசித் தமிழன் இருக்கும் வரை விடுதலைப் புலிகளை அழிக்க முடியாது என்பது அவ்வப்போது உணரப்பட்ட உண்மை. கடந்த நாற்பது ஆண்டுகளாக இழிவுபடுத்தப்பட்ட தமிழ் மக்கள் சிங்கள அரசை நம்பி ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளப் பின்வாங்குகின்றனர். சந்தேகக் கண்கொண்டே அனைத்தும் நோக்கப்படுவதால் தொடர்ந்தும் உரிமைக்காகப் போராட மனந்தளரா நிலை உருவாகிறது. போராளிகளும் ஊக்குவிக்கப் படுகிருர்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் 7 மாகாணசபைத் தேர்தல்களும் முடிந்து வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்துவது அடுத்த எதிர்நீச்சலாக உள்ளது. புலிகளை அழிக்க முடியாதெனின் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவர்கள் பங்குபற்றுத ஒரு தேர்தலை நடத்தவேண்டும். அல்லது அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். முன்னையது பலனளிக்காது என்பது திண்ணம் என்பதாலேயே பின்னையது முயற்சிக்கப்படுகின்றது.

புலிகளை அழிக்க முடியாதெனின் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப் படவேண்டும். இலங்கை அரசு தன் இயலாத் தன்மையாலேயே இதுவரை பல உரிமைகளைச் சலுகைகளாகக் கொடுக்க முன்வந்தது. தொடர்ந்தும் அத்தகைய ஒரு சூழ்நிலையே அதனை வலியுறுத்த முடியுமாயின் மாற்றுவழி ஏது? எதிர்நீச்சலே தொடருமா ?

நியாயம் எப்பக்கமுள்ளதோ அப்பக்கமே நிலைத்துநிற்கும். எதிர்நீச்சலுக்கு தளராத உறுதியும், வலிமையும் வேண்டும். அரசுகளுக்கு அவை எம்மாத்திரம். ஒடுக்கப்பட்டவர்க்கே அவை இறைவனின் கொடை.

**வினை வலியும் தன் வலியும் மாற்ருன் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல்.**

# ''மீட்பரின் அன்னை'' திருத்தந்தையின் சுற்றுமடல் (22)

## அவர்கள் தாய்நாடு வந்துசேரும் வரை மரியாளின் தாய்மை தடையின்றி நீடித்திருக்கும்

அவளது மகனின் விண்ணேற்பின் பின்னர் அவளது தாய்மைப்பணி திருச்சபையிலே தாய்க்குரிய பரிந்துரைப் பணியாக நிலைத்துநிற்கின்றது. தனது மக்களுக்காகப் பரிந்துரைப்பதிலும், உலகின் மீட்பரான தனது மகனின் மீட்புப்பணியிலும் அன்னை ஒத்துழைக்கின்ருள். உண்மையில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் எடுத்துரைப்பதாவது: ''தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் முடிவில்லா நிறைவு பெறும்வரை அருள் திட்டத்தில் மரியாளின் இத்தாய்மை தடையின்றி நீடித்திருக்கும்'' (திரு. 62).

மீட்பளிக்கும் அவளது மகனின் மரணத்துடன், ஆண்டவரின் அடிமையினது தாய்க்குரிய பரிந்துரைப்பணி உலகளாவிய கண்ணேட்டத்தைப் பெறுகின்றது. ஏனெனில், மீட்புப்பணியானது முழு மனித இனத்தையுமே தழுவியதாகும். இவ்வாறு தனிப்பட்ட விதத்திலே இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான கிறிஸ்துவின் உலகளாவிய ஒரே பரிந்துரைப்பணியின் ஆற்றல் வெளிப்படுத்தப்படுகிறது. அன்னையின் ஒத்துழைப்பானது ஒரே இணைப்பாளரான மீட்பரின் உலகளாவிய இணைப்புப் பணியிலே அதற்குக் கீழ்ப்பட்ட விதத்தில் பங்கெடுக்கின்றது. சங்கத்தின் மேற்கூறப்பட்ட வார்த்தைகளினுல் இவ்வுண்மை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மேலும் எடுத்துரைப்பதாவது: ''விண்ணேற்றத்திற்குப் பின்பும் இம்மீட்பு அலுவலை அவள் விட்டுவிடவில்லை. மாருக, பலவிதங்களில் பரிந்துபேசி நித்திய மீட்படைய நமக்குத் தேவையான கொடைகளை என்றும் பெற்றுத் தருகின்ருள். (திரு. 62) அவளின் ''பரிந்துரைப்பணியின்'' பண்பானது முதலில் கலிலேயாவிலுள்ள கானுவூரில்வெளிப்படுத்தப்பட்டது. திருச்சபையினதும் உலகினதும் வரலாற்றில் மரியாளின் பரிந்துரைப்பணி தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. ''பல இன்னல் இக்கட்டுகளிடையே இன்னும் பயணம் செய்துகொண்டிருக்கும் தனது மகனின் சகோதரர்களை, அவர்கள் தங்கள் மகிழ்ச்சி நிறை தாய்நாடு வந்துசேரும் வரை, தாய்க்குரிய அன்போடு காத்துவருகின்ருள்.''(திரு.62) என்றும் சங்க ஏட்டில் படிக்கின்றேம். இவ்விதமாக மரியாளின் தாய்மையானது பரிந்துரைக்கும் இணைப்புப்பணியாக இடையூறின்றித்தொடர்கின்றது. ''பரிந்துரைப்பவள், துணையாக நிற்பவள், உதவி அளிப்பவள், இறைவனுக்கும் மக்களுக்கும் நடுவில் நிற்பவள்'' (திரு. 62) எனப் பல அடைமொழிகளால் மரியாளை நோக்கி வேண்டுவதன் மூலமாகத் திருச்சபை இவ்வுண்மை பற்றிய தனது விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றது.

## மரியாளின் விண்ணேற்பு பற்றிய சத்தியம் திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் வரையறுக்கப்பட்டது

41, ஏற்கெனவே ''விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன்'' (திரு.62) காரணமாக மரியாள் மீட்பரின் ஒரே இணைப்புப்பணிக்குக்கீழ்ப்பட்ட முறையில் தனது பரிந்துரைப் பணியால் புனிதர்களது கூட்டுறவின் இறுதிக்கால, விண்ணக நிலையுடன் உலகிலுள்ள பயணத் திருச்சபை இணைவதற்கு சிறப்பான விதத்தில் உதவுகின்ருள். 12ம் பத்திநாதரால் வரையறுக்கப்பட்ட மரியாளின் விண்ணேற்பு பற்றிய சத்தியமானது 2ம் வத். சங்கத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது திருச்சபையின் விசுவாசத்தைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது: ''அமல உற்பவக் கன்னியானவள் ஆதிப் பாவக் கறை எதுவுமின்றிப் பாதுகாக்கப் பெற்று, தன் மண்ணுலக வாழ்வுக்குப் பின் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச் செல்லப்பெற்ருள்; அனைத்துலக அரசியாக இறைவனுல் உயர்த்தப்பெற்ருள்; ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரானவரும் (திருவெளி. 19:16) பாவத்தின் மீதும் சாவின் மீதும் வெற்றி கண்டவருமான தன் மகனுக்கு அதிக நிறைவாக ஒத்தவளாகுமாறு இவ்வாறு உயர்த்தப்பெற்ருள்'' (திரு. 59) இந்தப் போதனையில், கீழை, மேலைத் திருச்சபைகளின் வரலாற்றில் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ள பாரம்பரியத்துடனுன தொடர்பை 12ம் பத்திநாதர் பேணியுள்ளார்.

மரியாளின் விண்ணேற்பு மறைபொருளில், உலகை மீட்டவரும் உயிர்த்த ஆண்டவருமான கிறிஸ்துவின் ஒரே இணைப்பின் பலாபலன்கள் அவளிலே தெளிவாக நிறைவேறியுள்ளன; ''கிறிஸ்துவில் எல்லாரும் உயிர்பெறுவர். அதை ஒவ்வொருவனும் குறிப்பிட்ட வரிசையின்படி பெறுவான்; முதற்கனியாகக் கிறிஸ்து உயிர்பெற்ருர். அடுத்து, கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் அவருடைய வருகையின்போது உயிர்பெறுவர்'' (1 கொரி. 15:22-23). மரியாளின் விண்ணேற்பு என்னும் மறைபொருளில் திருச்சபையின் விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி மரியாள் கிறிஸ்துவுடன் மிகவும் நெருங்கிய விதத்தில் பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளாள். கிறிஸ்துவின் முதலாவது வருகையின்போது கன்னியாகவும் தாயாகவும் அவருடன் இணைந்திருந்தாள்; அதனைப்போலவே, தனது நீடித்த ஒத்துழைப்பின்மூலம் அவரது இரண்டாவது வருகைக்கான எதிர்பார்ப்பிலும் இணைந்துள்ளாள்: ''தன் மகனின் பேறுபலன்களை முன்னிட்டு அவள் உன்னத முறையில் மீட்கப்பெற்று, நெருங்கிய, பிரிக்கமுடியாத முறையில் இணைக்கப்பெற்றிருக்கிருள்'' (திரு. 53) அத்துடன் அவரது இறுதி வருகையின்போது இரக்கத்தின் காரணமாக இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் நிற்பவளாகவும் விளங்குகிருள். அவ்வேளை கிறிஸ்துவைச் சார்ந்த அனைவரும் உயிர்பெறுவர். ''இறுதிப்பகைவனுகத் தகர்க்கப்படுவது சாவே'' (1 கொரி. 15:26)

## ஆண்டவனின் அடிமை, அனைத்துலக அரசி

மாண்புமிக்க ''சீயோன் மகளின்'' விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த உயர்வான மகிமையோடு தொடர்புடையதுதான் அவளது முடிவில்லா மகிமை பற்றிய மறைபொருளாகும், ஏனெனில், கிறிஸ்துவின் அன்னை ''அனைத்துலக அரசியாக'' மாட்சியடைந்துள்ளாள். மங்கள வார்த்தையின்போது ''ஆண்டவரின் அடிமை''எனத் தன்னைக் கூறிக்கொண்டது மட்டுமல்லாமல், தனது மண்ணுலக வாழ்வு முழுவதும் அதற்கொப்பபிரமாணிக்கமாக வாழ்ந்தாள். இவ்வாறு, பணிசெய்வதே தனது வாழ்வின் நோக்கம். என்று ஆணித்தரமாக எடுத்துரைத்த கிறிஸ்துவின் உண்மையான சீடர் தானே என்பதை உறுதிப்படுத்தினுள்: ''மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்.'' (மத். 20:28) ''தம் அயலாரில் கிறிஸ்துவுக்குப் பணிசெய்து, தாழ்ச்சியுடனும் பொறுமையுடனும் தங்கள் சகோதரர்களை அரசரிடம் (கிறிஸ்துவிடம்) கூட்டிவருவோரில் மரியாள் முதலிடம் வகிக்கின்ருள்'' (திரு. 36) ஊழியம் செய்வதே ஆள்வதாகும் எனும் கிறிஸ்துவின் சீடர்களுக்கே உரித்தான ''அரச சுதந்திரத்தை'' அவள் முழுமையாகப் பெற்றுக்கொண்டாள்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# மரியாள் வணக்கம்-பொதுவான கண்ணோட்டம்

### மரியாளின் ஆண்டு சிறப்புக் கட்டுரை (1)

கத்தோலிக்க திருச்சபையின் விசுவாச வாழ்வில் மரியாள் வணக்கம் சிறப்பான இடம் வகிக்கின்றது. திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பரின் மரியாளின் ஆண்டு அறிவிப்பைத் தொடர்ந்து திருச்சபையின் வாழ்வில் மரியாள் வணக்கம் மீண்டும் மறுமலர்ச்சி கண்டுள்ளது எனலாம். எமது யாழ் மறைவட்டத்திலும் மரியாளின் ஆண்டினையொட்டி கருத்தரங்குகளும், ஆயத்த வழிபாடுகளும், பக்தி முயற்சிகளும், திருயாத்திரைகளும் அன்னையின் திருச்சுருபப் பவனிகளும் பல்வேறு பங்குகளிலும் நடந்தேறிய வண்ணம் இருக்கின்றன. கத்தோலிக்க விசுவாசிகள் மட்டுமல்லாது, பிறமதத்தினரும் கூட பரிசுத்த கன்னிமரியாளைப்பற்றி அறிவதிலும் அவளை வரவேற்பதிலும் அவளது வணக்க வழிபாடுகளில் கலந்துகொள்வதிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காணக்கூடியதாய் உள்ளது. இத்தகைய அரிய சந்தர்ப்பத்தில் மரியாள் என்ற மறைபொருளைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அதனைத் தமது விசுவாச வாழ்வோடு இணைத்துப் பார்ப்பது மிகவும் அவசியமானதும் பயனுள்ளதுமாகும்.

**மரியாள் எனும் மறைபொருள்**

மரியாள் வணக்கமென்பது திருச்சபையிலே ஏதோ அண்மையில் தோன்றிய ஒன்றல்ல, மாருக ஆதித் திருச்சபையிலேயே அரும்பிவிட்ட ஒன்று, முக்கியமாக கி. பி. 431இல் எபேசு திருச்சங்கம் மரியாளை 'இறைவனின் அன்னை' என்று அறிவித்ததைத் தொடர்ந்து திருச்சபையில் வேகமாகப் பரவிவந்த ஓர் இயக்கமாகும். ஆம், இறைவனின் நித்திய மீட்புத்திட்டத்திலே பரிசுத்த கன்னிமரியாள் சிறப்பான பங்கு வகிக்கின்ருள். இந்த உலகிலே மனித உடல் எடுக்கவிருந்த இறைமகனுக்கு அன்னையாக முன்குறித்து வைக்கப்பட்டவள். இறைவனின் தாய் எனும் ஒப்பற்ற நிலைக்குத் தேர்ந்துகொள்ளப்பட்ட மரியாளை, இறைவன் தமது அருளின் ஆற்றலினல் கருவிலேயே பாவமற்றவளாகத் தேர்ந்தெடுத்தார். ஆதாம் குலத்தில் பிறந்த அனைவரும் சென்ம பாவத்தின் தோஷத்தோடு பிறப்பெடுத்தபோது மரியாள் மட்டும் தூய லில்லியாக இதழ் விரித்தாள். இதன் காரணமாகவே நாம் அவளை ''அமல உற்பவி'' என அழைக்கின்றோம். இறைவனின் மேலான திட்டத்தை கபிரியேல் வானதூதர் முதன் முதலாக மரியாளுக்கு அறிவித்த போது, தன்னையே முழுமையாக 'ஆண்டவரின் அடிமை' என்று இறைத்திருவுளத்திற்குக் கையளிக்கின்ருள். லூக். 1: 38) மரியாளின் மனமுவந்த ஒப்புதலை ஏற்றுக்கொண்ட இறைவன் அவளுக்குத் தாய்மைக் கொடையைத் தருகின்ருர். இவ்வாறு ''கணவனையே அறியாத அவள் தூய ஆவி நிழலிடத் தன் விசுவாசத்தாலும் கீழ்ப்படிதலாலும் தந்தையின் மகனையே உலகில் பெற்றெடுத்தாள்'' (திரு. 63) 'ஆண்டவர் தாமே உங்களுக்கோர் அடையாளம் தருவார் இதோ, கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்'' (இசை. 7: 14) எனும் இசையாஸ் இறைவாக்கினரின் அறிவிப்பைத் தனது தாய்மைப் பேற்றினுல் நிறைவு செய்கின்ருள்.

இறைவனின் மேலான அழைப்பினைப் பெற்றுத் தன்னையே அதற்கு முழுமையாக அர்ப்பணித்து, இறைமகனை இந்த உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த அன்னைக்கு இறைவன் கொடுத்த இன்னுமோர் கொடைதான் அவளின் கன்னிமை. ஆம்! இறைவனின் அன்னையாகத் தேர்ந்து கொள்ளப்பட்ட மரியாள் இறைவனுக்கே முற்றிலும் சொந்தமானவள், எனவே தனது திருமகன் கிறிஸ்துவின் மீட்பு அலுவலில் தன்னை முற்றிலும் இணைத்துக் கொண்டாள். தன் மகனேடு கொண்டிருந்த ஒன்றிப்பை சிலுவை வரை விடாது காத்துவந்தாள். கிறிஸ்து சிலுவையில் தொங்கும் போது அவரது பாடுகளில் தானும் பங்குகொண்டு வியாகுல அன்னையாகத் தன்னை அடையாளம் காட்டுகின்ருள். இவ்வாறுதான் மீட்பராம் கிறிஸ்துவின்முதல் சீடராளுள். இறைவனின் திருவுளத்தையே எப்போதும் பிரமாணிக்கத்துடன் முழுமையாக நிறைவேற்றி வாழ்ந்த மரியாளுக்கு இறைவன் கொடுத்த பரிசு அவளை ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டதாகும். இதனையே நாம் மரியாளின் 'விண்ணேற்பு' என அழைக்கின்றோம். இறைவனது விண்ணக மகிமையில் முழுமையாகப் பங்குகொள்ளும் அன்னை மரியாள் தனக்குரிய தனிப்பட்ட அருட்கொடைகளாலும் அலுவல்களாலும் திருச்சபையோடு நெருங்கிய விதத்தில் இணைக்கப்பட்டிருக்கிருள். நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுகிருள். தனது நிறைவான விசுவாச வாழ்விஞல் கிறிஸ்தவ விசுவாசத்தின் எடுத்துக்காட்டாக, மாதிரியாகத் திகழ்கிருள். இவ்வாருக, அருள் வாழ்வில் திருச்சபையின் தாய் எனப் போற்றப்படுகின்ருள்.

**முடிவுரை**

மரியாள் எனும் மறைபொருள் மனித கண்டுபிடிப்பு அல்ல, இறைவனின் ஞானத்திலே, அவரது மேலான திட்டத்திலே தோன்றிய ஒன்று. மரியாள் மறைபொருளின் பல்வேறு உண்மைகளையும் ஆழ்ந்த விதத்திலே சிந்தித்து, அவற்றின் ஒளியில் நமது விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்புவதுதான் மரியாள் வணக்கத்தின் நோக்கமாகும். எனவே மரியாள் வணக்கம் என்பது வெறும் உணர்ச்சி சம்பந்தமான ஒன்றல்ல. அவ்வாறு இருப்பின் அது நமது விசுவாச வாழ்வுக்குப் பயன்தராது அத்துடன் மரியாளை நாம் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். மரியாள் வணக்கம் என்பது அவளை வெறும் வழிபாட்டுப் பொருளாக மாற்றிவிடக் கூடாது. சிலவேளைகளில் மரியாள் வணக்கமானது மிகைப்படுத்தப் படுவதுமுண்டு. அதாவது மரியாள் என்பவள் கடவுளின் சினத்தைத் தணிப்பவளாகவும் அல்லது கடவுள் இரக்கமற்றவர், நெருங்கமுடியாதவர் என்றும் மரியாளால்தான் முடியும் என்ற வகையிலே மரியாள் வணக்கத்திற்கான காரணங்கள் தலைதூக்குவதும் உண்டு.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# இலங்கை வானொலியில் கத்தோலிக்க தமிழ் நிகழ்சிகள்

**1988 ஏப்ரல் திங்கள் எட்டாம் நாள் கொழும்பில் நடைபெற்ற சமூகத்தொடர்பு சாதனங்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் (தமிழ்) கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.**

இலங்கை வானொலியில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் ஒன்றுவிட்ட ஒரு வாரம் ஒலி பரப்பப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் வளர்ந்தோருக்கான அரை மணிநேர நிகழ்ச்சிகளும், செவ்வாய்க்கிழமைகளில் சிறுவர்களுக்கான பதினைந்து நிமிட நேர நிகழ்ச்சிகளும். சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் ஐந்து நிமிட நேர சிந்தனைகளும் இதில் அடங்கும்.

**அமைப்பு நோக்கம்:**

வளர்ந்தோருக்கான அரை மணி நேர நிகழ்ச்சி 'புதிய உலகம்' என்னும் பெயரிலும் சிறுவர்களுக்கான பதினைந்து நிமிட நேரநிகழ்ச்சி 'சிறுவர் உலகம்' என்னும் பெயரிலும் தொகுக்கப்பட்டு வருகின்றன.

நேயர்களின் மாறுபட்ட சுவைகளை மனதில் கொண்டு பல்வேறு அம்சங்களைக் கொண்ட சஞ்சிகை நிகழ்ச்சிகளாகவே இவை தொகுக்கப்படுகின்றன.

நற்செய்திப் பணியின் பல்வேறு முனைப்புகளையும் நினைவிலிருத்தி, திருச்சபையின் போதனைக்கேற்ப முழுமனித வளர்ச்சிக்காக அனைத்து வானொலி நேயர்களுக்கும் ஏற்ப இவை தயாரிக்கப்படுகின்றன.

**சிறப்பு நிகழ்ச்சிகள்:**

வழமையான நிகழ்ச்சிகளைவிட திருவிழாக் காலங்களில்—குறிப்பாக கிறிஸ்மஸ், தவக்காலம், புனிதவாரம் போன்ற காலங்களில் மேலதிக நேரங்கள் எடுக்கப்பட்டு சிறப்பு நிகழ்ச்சிகளும் தயாரித்து வழங்கப்படுகின்றன.

ஒரு மாதத்தில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும் நேரம் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள். கிறிஸ்தவ நிகழ்ச்சியையும் சேர்த்தால் இது இரட்டிப்பாகி நான்கு மணித்தியாலங்களாகும். பிற மறைகளோடு ஒப்பிடும் பொழுது கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நேரம் போதாது— மிகக் குறைவு என்பது பெரும்பாலான நேயர்களின் நீண்ட காலக் குற்றச்சாட்டு.

**கலைஞர் பங்களிப்பு:**

கடந்த காலங்களில் எமது நிகழ்ச்சிகளில் வெளியூர்க் கலைஞர்கள் பங்குபற்றினர். இவர்களின் பங்களிப்புக்காக நிகழ்ச்சியின் அரைப்பகுதி ஒதுக்கப்பட்டது. ஆயினும் இவர்கள் வாய்ப்பை எத்துணை அளவு சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது கேள்விக்குரியது. பெரும்பாலான வெளியூர்க் கலைஞர்களினுல் நிகழ்ச்சியின் தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது என்பதுவே பெரும்பாலான நேயர்களினதும், நிலையத் தயாரிப்பாளர்களினதும் கருத்தாகும். போதிய ஆற்றல், பயிற்சி இன்மையே இதற்குக் காரணங்களாகக் கொள்ளலாம்.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலைத் தொடர்ந்து இன்றுவரை வெளியூர்க் கலைஞர்களின் பங்களிப்பு பெரும்பாலும் நின்றுவிட்டது. தொடர்ந்து நாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்களும், போக்குவரத்துப் பிரச்சனைகளும், பாதுகாப்பின்மையுமே இதற்குக் காரணங்களாகும் இதனுல் தற்போது பெரும் பாலான நிகழ்ச்சிகள் முழுக்க முழுக்க நிலையத் தயாரிப்பாகவே அமைந்து விடுகின்றன. இது ஒரு வகையில் நிகழ்ச்சியின் தரத்தை உயர்த்தி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவ்வப்போது வாய்ப்பு வசதிகளுக் கேற்ப வெளியூர்க் கலைஞர்களும் பங்குபற்றவே செய்கின்றனர்.

**நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு:**

கொழும்பில் தேசிய ரீதியில் ஒலிப்பதிவுக்காக இயங்கிய கலையகம் கொழும்பு மறைமாவட்டத்துக்குச் சொந்தமானதாலும், 1983ஆம் ஆண்டுக்கும் பின் நாட்டில் ஏற்பட்ட அமைதிக்குறைவு பாதுகாப்பு இன்மையாலும் நாட்டில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் ஒன்றில் கலையகம் ஒன்று உருவாக்கப்படுவதன் தேவை உணரப்பட்டது. இதற்கு மட்டக்களப்பு வாய்ப்பாகவும், வசதியாகவும் இருந்ததால் மட்டக்களப்பில் மறைமாவட்ட ரீதியில் கலையகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகத்தின் அனுமதியுடன் இங்கிருந்தே தற்சமயம் நிகழ்ச்சிகள் தயாரித்து வழங்கப்படுகின்றன. ஆயினும் நாட்டு நிலைமைகள் முற்ருகத் திருந்தியபின் இது பற்றி மீண்டும் பரிசீலிக்க வாய்ப்புண்டு.

**தயாரிப்புச் செலவு:**

தற்போது கலைஞர்களின் தயாரிப்புச் செலவாக நற்சிந்தனைகளுக்கு முப்பது ரூபாவும் பனைந்து நிமிட, முப்பது நிமிட நிகழ்ச்சிகளுக்கு நூறு ரூபாவும் வழங்கப்படுகிறது. நற்சிந்தனை நீங்கலாக இது கடந்த எட்டு ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வருவதாகவும் தயாரிப்பில் ஏற்படும் பல்வேறு செலவுகளுக்கு, தற்கால வாழ்வுச் சூழலில் இது போதாது என்பது பலரதும் முறைப்பாடாகும். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு வானொலி நிகழ்ச்சிகளும் விதிவிலக்கல்ல என்பது நினைவிலிருத்தற்பாலது ஆகவே இவைகளைக் கருத்திற் கொண்டு வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புக்காக ஒதுக்கப்படும் உதவித் தொகைபற்றி மீளாய்வு செய்வது நல்லது.

**பரிந்துரைகள்:**

1) மறைமாவட்ட ரீதியாக நிகழ்ச்சிகளை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் முறையை நிறுத்தி ஆங்காங்கே உள்ள ஆற்றலும் ஆர்வமும் உள்ள கலைஞர்களுக்கு மட்டும் அடிக்கடி பங்குபற்றும் வாய்ப்பளிக்கலாம். இதனுல் அவர்கள் வளரவும், நிகழ்ச்சி சிறக்கவும் வாய்ப்புண்டு.

2) தற்போது தயாரிப்புச் செலவாக கலைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் பதினைந்து நிமிட நிகழ்ச்சிகளுக்கு 125/- ரூபாவாகவும், முப்பது நிமிட நிகழ்ச்சிகளுக்கு 150/- ரூபாவாகவும் அதிகரிக்கலாம்.

3) வானொலியில் எமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக்குறைவு என்று பலரும் குறிப்பிடுவதால், அது உண்மையும் கூட, நிகழ்ச்சிகளுக்கான நேர அதிகரிப்புக்காக இ. ஒ. ப. கூட்டுத்தாபன நிர்வாகத்துடன் தொடர்கொண்டு முயற்சிக்கலாம்.

4) வானொலியில் ஒலிபரப்பப்படும் கத்தோலிக்க நிகழ்ச்சிகள்பற்றி மறைமாவட்ட ரீதியாக சமூகத்தொடர்பு நிலையங்கள் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தலாம். ஆலய அறிவிப்புகள், வெளியீடுகள், பிரசுரங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை இதற்குப் பயன்படுத்தலாம்.

எஸ். எஸ். யேசுதாஸ்
(மலர் வேந்தன்)
இணைப்பாளர்—கத். தமிழ்
வானொலி நிகழ்ச்சிகள்

# “மன்னிப்பைத் தேடும் ஓர் மனிதன்”

சிறுகதை

அன்று ஞாயிற்றுக்கிழமை ஏஜென்சியிடம் செல்வதற்காக ரகு ரெயினில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது ஓர் இளைஞர் அவனது அருகில் ஆழ்ந்த மன வருத்தத்துடன் அமர்ந்திருந்தான். இவ் இளைஞனிடம் ரகு, “நீங்கள் எங்கு போகின்றீர்கள்” என விசாரித்தான். அதற்கு அவனோ பதிலளிக்காமல் இருந்தான். மீண்டும் ரகு ஏன் ஓர் மாதிரியாக இருக்கின்றீர் எனக் கேட்ட போது அதற்கு அந்த இளைஞன் ரகுவின் முகத்தைப் பார்த்தான் அப்பொழுது இளைஞனின் முகம் மலர்ந்து ரகுவைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவாறு “நீங்க ரகு தானே” எனக் கேட்க ரகு “ஓ நான் ரகுவே தான்” “நீங்க...” “நான் தான் ரமேஸ் என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? நாம் இருவரும் யாழ்ப்பாணம் சென்ரல் கொலிச்சில் படித்தோமே இதுவும் ஞாபகமில்லையா?” எனக் கேட்டான் அந்த இளைஞன். அப்போது ரகுவின் பழைய நினைவுகள் சிந்தனையில் தவழ்ந்தன. “ஓ இப்போது தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது ரமேஸ்” எனக் கூறி இருவரும் ஒன்றாய் மீண்டும் இணைகின்றனர்.

ரமேசிடம் ரகு “ஏன் ஆழ்ந்த கவலையுடன் இருக்கின்றாய் ஏதும் பிரச்சினை நடந்து விட்டதா?” என வினவுகின்றான். அப்போது ரமேஸ் “அப்படி ஒன்றுமில்லை. என் வாழ்க்கையில் நடக்க முடியாத ஒரு சம்பவம் நடந்துவிட்டது. இதனால் என் நிலைமை இப்படி மாறிவிட்டது” எனக் கண்களால் கண்ணீர் மல்கியவாறு ரகுவிடம் சம்பவத்தைக் கூறினான்.

“எனது அப்பா, அம்மா, இறந்து ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டது. நானும் என் தங்கை சுதாவும் அயல் வீட்டுக் காரியின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தோம். தாயும் தந்தையும் இன்றி வாழ்ந்த எங்களை அந்த அயல் வீட்டுக் காரி கடுமையாகக் கஷ்டப் படுத்தி வந்தாள். இதை நானும் எனது தங்கையும் பொறுமையாக ஏற்று நடந்தோம். ஆனால் அவளோ மென் மேலும் எங்களை அடிமையாக்கினாள். இவற்றையெல்லாம் தாய், தந்தைக்கு செய்யும் பணியாக நினைத்துச் செய்தோம். A/L வகுப்பு வரை படித்து விட்டு ஓர் வேலை தேடி அலைந்து திரிந்தேன். வேலை கிடைக்கவில்லை. இதனை நினைத்த படியே கட்டிலிற் படுத்துறங்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென விசில் ஒன்று ஊதிக் கேட்ட சத்தத்தில் விழித்துக் கொண்டேன். எனது படலைப் பக்கமாக வந்து பார்த்தேன். தபாற்காரன் தபாலை எனது கையிற் கொடுத்தான். அதன் விலாசத்தைப் பார்த்தபோது ரமேஸ் என எழுதப்பட்டிருந்தது. உடனே அதை பிரித்துப் படித்தேன். ஆசிரியர் இன்ரவியுவுக்கு கொழும்பு வரும் படியாக எழுதியிருந்தது. கையில் பணம் இல்லாமையால் கொழும்பு செல்வதற்கு வழியின்றித் தத்தழித்தேன். கஷ்டத்தின் மத்தியில் யாரிடம் கேட்பது என எண்ணித் தடுமாறினேன். இருந்தும் அயல் வீட்டுக் காரர்களிடம் நான் விசாரித்தேன். எனக்கோ பணம் கொடுப்பாரில்லை. இருந்தும் கொடுக்க மறுத்தனர். (காரணம் - நான் ஏழை இவனுக்குக் கொடுத்தால் எப்படித் திருப்பித் தருவான் என்பது) கடைசியில் வெறும் கையோடு வீடு வந்தேன். இதை அறிந்த என் தங்கையின் மனம் வேதனையில் மூழ்கிக் கிடந்தது. அப்பொழுது என்னை அழைத்து ஓர் விசயத்தைக் கூறினாள். எமது வீட்டுக் காரியிடம் பணம் உண்டு. அவளிடம் விசாரி எனக் கூறினாள். வீட்டுக் காரியின் குணத்தை அறிந்த என் மனம் கேட்பதற்குத் தயங்கியது. இருந்தும் கேட்பதற்காகச் சென்று அவளிடம் விசாரித்தேன். பணம் உண்டு ஆனால் உங்களுக்கு நான் குடுக்கப் போவதில்லை என எரிந்து கூறிவிட்டாள்.

என் மனதில் இவ் வேதனைகளைச் சுமந்தவாறு சிந்தித்தபடியே நாங்கள் இவளுககு அடிமையாக வேலை செய்து கொடுத்தும் பலனே இல்லை. இதற்கு ஓர் வழி கிடையாதா? எனக் கவலையுடன் சிந்தனையில் மூழ்கிக் கொண்டிருந்தேன். பின்பு நான் உள்ளே சென்று எனது பெட்டியைத் திறந்தேன். அப்பொழுது எனது பெட்டியின் உள்ளே (200/=) இரு நூறு ரூபா பணம் இருப்பதைக் கண்டேன். இதைத் தங்கையிடம் விசாரித்த போது இது எமது வீட்டுக் காரியுடைய பணம் தான். மாறி எமது பெட்டிக்குள் வைத்து விட்டாள். இதை எடுத்துக் கொண்டு கொழும்புக்குச் செல் எனத் தங்கை கூறினாள். இதைக் கேட்டதும் எனது கைகள் சோர்ந்து போய் பணத்தை வைக்க முற்பட்டது. ஆனால் அங்கு செல்ல வேண்டும் நிச்சயம் நான் எடுபடுவேன் என்ற ஆர்வத்தால் இதைக் கொண்டு கொழும்பு சென்றேன். அதிகாலை நேரத்துடன் எழுந்து காலைக் கடனை முடித்துக் கொண்டு கடையிற் தேனீரை வாங்கிக் குடித்துவிட்டு இன்ரவியுவுக்குச் சென்றேன். இதில் நான் பாஸ் பண்ணி விட்டேன். இந்த மகிழ்ச்சியுடன் நான் எனது வீட்டுக்குப் புறப்பட்டேன். சிறிது தூரம் அண்மித்ததும் எமது வீட்டில் சனங்கள் குழுமி நிற்பதைப் பார்த்து என் மனதிற்குள் என்ன நடந்து விட்டது....... என் தங்கைக்கு ஏதாவது ஆகி விட்டதோ என நினைத்தபடியே நடந்து சென்ற கால்கள் ஓட முயற்சித்தது. அங்கே சென்றபோது என் தங்கை வீதியில் அழுது கொண்டிருந்தாள். இதைக் கண்ட நான் தங்கையிடம் சென்று என்ன நடந்தது? ஏன் அழுகின்றாய் என வினவினேன்? அப்பொழுது தங்கை “அண்ணா இரு நூறு ரூபா பணம் எங்கே எனக் கேட்டு என்னையும் உன்னையும் திருடர்கள் எனக் கூறி வீதியிலே என்னை இழுத்து வந்து எமது உடுப்புக்களையெல்லாம் வீசி எறிந்து விட்டாள்” என அழுத படியே கூறினாள்.

தாயின்றித் தந்தையின்றி என் அரவணைப்பில் வாழ்ந்த என் தங்கையின் அழுகையைக் கண்டு என்மனம் துடித்தது. கண்கள் சிவந்தவாறு ஆத்திரப்பட்டேன். பின் ஆத்திரத்தால் ஒன்றையும் சாதிக்க முடியாது என எண்ணி அமைதியாக நடந்தவற்றை அறிந்து – அவமானத்துடன் தங்கை சுதாவை அழைத்துக் கொண்டு வேறு ஊருக்குச் சென்றோம். எனது மனதில் “திருடன்” என்ற அந்தச் சொல் என்னைப் பயித்தியக் காரனாக்கிவிட்டது. நான் வேலைக்குச் சென்று எனது சம்பளத்தை எடுத்துக் கொண்டு (200/=) இருநூறு ரூபாவையும் அத்தோடு வட்டியையும் சேர்த்துக் கொடுத்து வந்தேன். ஆனால் என்னைப் பொறுமையே ஆட்கொண்டது. மீண்டும் எனது ஊருக்குப் புறப்பட்டேன். என் தங்கை சுதாவிற்குத் திருமணம் செய்வற்காக ஓர் நல்ல மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தேன். சம்மதமாக இருந்த இத்திருமணம் பின்பு கலைந்து போயிற்று (காரணம் - நாங்க திருடர்கள் - என்ற கதை எம் ஊரிலும் பரவியதால்) இதனால் என் தங்கையின் வாழ்வில் ஒளி இன்றி இருளே சூழ்ந்தது. இவற்றைச் சகிக்க முடியாத காரணத்தால் என் தங்கை தற்கொலை செய்ய முற்பட்டாள். இதனை அறிந்த நான் தங்கையைக் காப்பாற்றி விட்டேன். என் வாழ்வில் ஏற்பட்ட சோதனையை எனது வாழ்வை யார் தான் புரிந்து கொள்வார்கள் என்ற சிந்தனையோடு இனிவாழ்வதில் பிரயோசனமில்லை - சாவதே மேல் என எண்ணி தற்கொலை செய்யப் போகின்றேன்” எனக் கூறி முடித்தான்.

இதைக் கேட்ட ரகுவின் இதயம் குமுறி எழுந்தது. இப்படிப்பட்ட அந்த கொடூர வீட்டுக்காரிக்கு ஓர் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என எண்ணினான். தமது வீட்டுக்கு ரமேசை அழைத்துக் கொண்டு சென்றான். ரகு - ரமேசைப் பார்த்து நண்பா நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே நீ செய்தது குற்றமல்ல- நீ குற்றவாளியுமல்ல திருடனுமல்ல என்பது எனக்குத் தெரியும். இதை அறியாத மக்கள் உன்னைத் திருடனாக மாற்றுகின்றார்கள் இவர்களின் கண்கெட்ட தனத்தை நீ மறந்துவிடு ...... இறைவன் இதற்குத் தக்க பலன் கொடுப்பார். இறைவன் இதை மன்னிப்பார். “மனந்திரும்பும் பாவி எவருக்கும் இறைவன் மன்னிப்பைதரக் காத்துக்கொண்டிருக்கின்றார்” என்பதை நீ மறந்துவிடாதே - நீ- வீட்டுக்கு வா போவோம் என ரமேசை அழைத்துக் கொண்டு ரகு - ரமேஸ் வீட்டுக்குச் சென்றனர். இவர்களின் வருகையை எதிர் பார்த்தவாறு தங்கை சுதா காத்துக் கொண்டிருந்தாள். ரமேசும், ரகுவும் வீடு வந்து சேர்ந்தனர். தங்கை சுதா அவர்களை வரவேற்றாள், ரகுவின் நினைவலைகள் ரமேசின் தங்கை சுதாவில் பாய்ந்தது. அவள் தேனீர் தயாரித்து அவர்களுக்குக் கொடுத்தாள். அப்பொழுது ரகு அவளின் முகத்தை சற்று நிமிர்ந்துபார்த்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முன்பு எப்படி இருந்த சுதா இப்படி அழகுடன் பெரிதாக வளர்ந்ததையிட்டு ரகுவின் மனதில் இன்பம் கொள்ளை கொண்டது.

அப்பொழுது ரகு - ரமேசிடம் “ரமேஸ்...... நான் உன் தங்கையைத் திருமணம் செய்யச் சம்மதிக்கின்றேன்” எனக் கூறினான். இதைக்கேட்ட ரமேஸ் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவாறு “ரகு நீயா......?” “ஆம் நான் தான்” எனக் கூறிய வாறு “உன் தங்கையின் விருப்பத்தைக் கேள்” எனக் கூறினான். அண்ணனின் முடிவே தங்கையின் முடிவு என நினைத்த அவள் “ஆம்” எனப்பதிலளித்தாள். ரமேசின் வாழ்விலும் - தங்கை சுதாவின் வாழ்விலும் ஓர் புத்துணர்ச்சி ஏற்பட்டது. உடனே ரமேசும், ரகுவும் ரகு வீட்டுக்குச் சென்றனர். சம்மதத்தைத் தெரிவித்தனர். ரகு ஒரே ஒரு பிள்ளையாதலால் ரகுவின் அப்பா – அம்மா இதற்குச் சம்மதம் கூறினர். ரமேஸ் மகிழ்ச்சியுடன் தன் வீடு நோக்கிப் புறப்பட்டான். ஓர் நாளைத் திருமணத்திற்காகக் குறிப்பிட்டு. அத்தேதியில் ரகுவிற்கும் - சுதாவிற்கும் திருமணம் - மாதாகோவிலில் நிறைவேறியது. இத்திருமணத்திற்கு எல்லாரும் வந்திருந்தார்கள். தமது அயல்வீட்டுக்காரி ரமேசிடம் தான் செய்த பாவத்திற்குப் பரிகாரம் கிடைத்துவிட்டது- என்னை மன்னித்து விடு எனக் கூறி - மண்டியிட்டான்,

மன்னிப்பின்றி - அவமானத்தைத் தாங்கியபடி வாழ்ந்த அந்த ரமேசின் மனது அவளை மன்னித்துத் திருமண விருந்தில் பங்கு கொள்ள அழைத்தான். பின்னர் - தன் அரவணைப்பின் - கீழ் வாழ்ந்த தன் தங்கை சுதாவை ரகுவின் கையில் ஒப்படைத்தான். “ரகுவும் சுதாவும்” மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். ரமேசும் தன் தங்கையின் - தந்தை, தாயாக அவளுக்குத் துணையாகவே வாழ்ந்தான்.

நன்றி!!

யாவும் கற்பனையே

புங்கையூர்ச் செல்வன்
லீனஸ் சகாயறூபன்.

---

## வாழ்வது நானல்ல

ஒரு யூதனும், ஒரு கிறிஸ்தவனும், ஒரு முஸ்லீமும் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

“நான் மோட்சம் போவேன்” என்றான் ஒருவன்.

“நான் மோட்சத்திற்கு அநேகமாகப் போவேன்” என்றான் மற்றவன்.

“நான் மோட்சத்திற்கு நிச்சயம் போவேன்” என்றான் மூன்றாமவன். அவர்கள் இவ்வாறு விவாதம் செய்துகொண்டிருந்த போது முனிவர் ஒருவர் தோன்றினார்.

அவர் சொன்னார் “நான்” போனால்—போவேன். ‘நான்’ என்பது அழிந்தால் தான் மோட்சம் போக முடியும். “வாழ்பவன் ‘நான்’ அல்ல; என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே”:
(கலா: 2.20)

நன்றி தோழன்

---

## ஒற்றுமை ஓங்கட்டும்

சாதி மதம் பார்க்காமல்
சாந்தியை நாம் வரவேற்போம்
மோதி மனம் கோணாமல்
மகத்துவத்தை அதில் காண்போம்!

போட்டி தீய வன் செயல்கள்
பொறுமை இல்லா இழி செயல்கள்.
வாட்டி விடும் எம்மினத்தில்
வரவேற்போம் அமைதியை நாம்!

புனிதமுள்ள நற் பணிகள்
புவியில் நன்கு நிலைத்திடட்டும்!
மனிதத்துவம் மேலோங்க
மகிழ்ந்திடுவோம் அமைதியிலே!

மனித வாழ்வு புவியினிலே
மடிந்து விடும் ஒரு பொழுதில்
இனிதாம் வாழ்வு கண்டிடவே
ஏற்றிடுவோம் ஒற்றுமையை!

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு”
என்பதனை மனதிற் கொண்டே!
ஒற்றுமையாய் ஒன்றுபட்டு, ஒன்று பட்டகைகளிலே!
ஏற்றிடுவோம் தீபங்கள்!

M. யூஜின் சாள்ஸ்
முரசுமோட்டை, பரந்தன்.

# தோல்விகளைத் தோற்கடிப்போம் வாரீர்!

வாழ்க்கை என்ற அரங்கில் நாம் நுழைகின்றபோது பலவித வெற்றிகளையும் தோல்விகளையும் அடைகின்றோம். எம் வாழ்க்கையென்பது பலவித எதிர்பார்ப்புக்கள் மத்தியில் அமைந்துள்ள ஒரு வளமாகும். ஆனால் இளைஞர்களான எமது வாழ்க்கையிலே, எமது இலட்சியங்கள், எமது நம்பிக்கைகள், எமது எதிர்பார்ப்புகள் வாழ்க்கையென்ற பூங்காவை அலங்கரிக்கும் மலர்கள், இதனாலே இளைஞர்களின் வாழ்க்கை வெற்றிதோல்வியென்ற சக்திகளால் நிர்ணயிக்கப்படுகின்றது.

தோல்வியென்பது இளைஞனை இன்று அலைக்கழிக்கின்ற ஒரு காரணி. இளைஞனின் எதிர்பார்ப்புகள் இன்று ஏமாற்றங்களாகின்றன. அவனது நம்பிக்கைகள் நலிவடைகின்றன. இலட்சியங்கள் இறக்கின்றன. இதற்கெல்லாம் காரணமென்ன? தோல்விகளின் வெற்றிகர செயற்பாடுகளே. தோல்விகளினால் இளைஞன் தொடர்ந்து தோற்கடிக்கப்படுகின்றான்.

இன்றைய இளைஞன் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளைச் சந்திக்கப் பின்வாங்குகிறான். தோல்விகளினால் விரக்தியென்ற வலையினுள் அகப்படுகின்றான். தனது வாழ்க்கையையே நடைப்பிணமாக மாற்றுகின்றான். இதற்கு இளைஞன் செய்யவேண்டியது என்ன? தோல்விகளுக்கு அவன் முகம் கொடுக்கவேண்டும். தன்னம்பிக்கையென்ற துடுப்பைக் கொண்டு, தோல்வியென்ற சமுத்திரத்தில், இளைஞன் தன் வாழ்க்கையென்ற படகைச் செலுத்தவேண்டும்.

''வென்றவர்கள் வென்று கொண்டிருப்பதில்லை, தோற்றவர்கள் தோற்றுக்கொண்டிருப்பதில்லை. வெற்றியும் தோல்வியும் ஒருபக்கம் சார்ந்ததாக வரலாறும் இல்லை.'' என்று அறிஞன் கூறுகின்றான். தோமஸ் அல்வா எடிசனின் வாழ்க்கையிலே, இவரும் அடுக்கடுக்காக பல தோல்விகளைத் தழுவினார். அவர் தன்னம்பிக்கையில் தளரவில்லை. ஈற்றில் மின்சாரத்தைக் கண்டுபிடித்தார். நெப்போலியன் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவன் தன்னம்பிக்கையினால் உயர்ந்தவன். 'என்னுடைய அகராதியில் தோல்வியே கிடையாது'' என்று கூறித் தோல்வியைத் தோற்கடித்தவன். தற்கால கவிஞனும் ''தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை இழக்கலாமா?'' என்று பாடுகின்றான்.

எனவே, இளைஞர் சமுதாயமே! எமக்குப்பரீட்சைகளில், வாழ்க்கை பலப்பரீட்சைகளில், இலட்சியங்களில் தோல்விகள் ஏற்படலாம். தோல்வி என்ற அரக்கனின் கோரப்பிடியினின்று நாம்விடுபடவேண்டும். எமது விரக்திகளை விரட்ட தோல்வியை விரட்டுவோம். இதற்கு எமக்கு தன்னம்பிக்கை தேவை. யானையின் பலம் தும்பிக்கையில், இளைஞனின் பலம் தன்னம்பிக்கையில். இதனால் ''தோல்விகளே, எமது வெற்றியின் படிக்கட்டுக்கள்'' என்பதை உணர்வோம். வாழ்வோம் வளர்வோம்.

''தோல்விகளை எதிர்கொள்வோம் தோல்விகளைத் தோற்கடிப்போம்''

நிலான் சந்தாம்பிள்ளை,
முருங்கன்.

---

அன்பு நெஞ்சன் வி. பி.
அவர்கட்கு வணக்கங்கள்.




மேலும் 'பாதுகாவலன்' மூலம் இளைஞர் சமுதாயத்தைத் திறம் பட அமைக்கவும், நாட்டின் நற்பிரஜையாக, ஒளிரும் குல விளக்காக மாற்றவும் ''இளைஞர் உலகம்'' என்னும் பகுதி மூலம் அரிய பல கருத்துக்களை எடுத்துரைத்து, அவர்களை இறைமகன் கிறிஸ்து காட்டிய பாதையில் அவர்களது வாழ்வுப் பயணப் பாதையினை வழிநடத்தி முடிவில்லாப் பேரின்பத்தை இளைஞர்கள் கண்டடையவும் இளைஞர் உலகம் படைப்புக்களைச் சிறந்த முறையில் ஒவ்வொரு இளைஞனின் உள்ளங்களையும் உருக வைக்கும் வண்ணம் ஆக்கங்களைக் அளித்து வரும் தங்களுக்கு எத்தனை ஆயிரம் நன்றி கூறினும் அஃது தங்கள் ஆக்கங்களுக்கு ஈடாகுமா? எனினும் நன்றி என்னும் சொல்லால் புகழ் மாலை சூட்டி, பாராட்டு என்னும் வார்த்தையில் வாழ்த்துரை கூறுவது வாசகராகிய எம் கடமை அல்லவா? அத்தோடு இளைஞர் உலகம் கருத்துக்கள் இளம் ஆண்களுக்கு மட்டுமன்றி இளம் யுவதிகளுக்குமே வாழ்வின் பல அர்த்தங்களை எடுத்துணர்த்தி ''வாழ்வே மாயம்'' என்று விரக்தியுறும்' எத்தனையோ இளம் உள்ளங்களைப் புதிய வாழ்விற்கு அழைத்து, அவர்களை வாழ்வின் விடிவெள்ளிகளாக மாற்றக் கூடிய சிறந்த கருத்துக்களை மலர்வித்து நறுமணங்கமழ வைப்பது பாராட்டற்குரியது.

மேலும் இன்றைய சூழ்நிலையில் இன்றைய இளம் நெஞ்சங்களின் உள்ளத் துடிப்பினை உணர்ந்து அதற்கேற்ப ஆக்கங்களை அமைப்பது உங்களது தனிச் சிறப்பு அன்றோ. இளைஞர் உலகம் பாதுகாவலனின் பிரசுரம் ஆகிய நாளில் இருந்து இன்று வரை அதனைத் தவறாது படித்துப் பயன் பெறும் இளம் உள்ளங்களில் நானும் ஒருத்தி. படித்தால் மட்டும் போதாது பங்கு பற்ற வேண்டும் என்ற நீண்ட நாள் ஆவலில், இந்த மடலை எழுதச் சந்தர்ப்பம் அளித்த இறைவனுக்கு நன்றிகூறிவிடை பெறுகிறேன்.

'இளைஞர் உலக'
அபிமான யுவதி,
மேரி வுளோறன்ஸ்-சூசைதாஸ்

---

உங்கள் ஆக்கங்களை இறுக்கமாகவும். சுருக்கமாகவும், தெளிவாகவும். ஒரு வெள்ளைத்தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்புங்கள்.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-25

அடைக்கலம்: ஒருமாதிரி பெரிய பள்ளிக்கூடத்தில அவரை, இவரைப், பிடிச்சுச் சேத்துப்போட்டேன். இனி ஒரு குறையுமில்லைப் பார்.

குருசுமுத்தண்ணை: ஏன் பள்ளிக்கூடம் சேர்த்தா கடமை முடிஞ்சு தெண்டுதான் இப்ப எல்லாரும் நினைக்கினம் அதை போலதான் நீயும் போல.

அடைக்கலம்: வேற என்ன வேண்டிக் கிடக்கண்ணே?

குருசுமுத்தண்ணை: எட... அவன் படிக்கிறானு? ஒழுங்காய் பள்ளிக்குப் போறானு, உன்ர பிள்ளையைப்பற்றி என்ன சொல்லினம், எண்டு எப்பவாவது பள்ளிக்கூடம் சென்று கேட்டிருப்பியளே? பெரிசில சேர்த்தா போச்சு பேருக்குச் சொல்லித் திரியிறதுக்குத் தான் அனுப்பிறியளோ?

## இளைஞனே நீ கேள்

நடப்பவை அனைத்தையும்
நடந்தபின் யோசியாதே.
நடக்குமுன் சிந்தித்து
நல்ல முடிவை எடுத்துவிடு.
நன்மையைத் தெரிந்தெடுத்து
நன்றற்றதை விட்டுவிடு.
நாட்கள் அனைத்தையும்
நல்வழியில் கழித்துவிடு.
நாநிலம் போற்றும்
நல்லவனாய் வாழ்ந்துவிடு.
நறுமண மலர்களாய்
நதியிடை மலர்ந்துவிடு.
நன்றியை உன்னிடத்திலிருந்து
நகர்த்திவிடாதே சிறிதேனும்
நம்பிக்கை வாழ்வை
நஷ்டமாக்காது அனைவருடனும்
நல்லன்பு கொண்டிரு.

D. E. ரட்ணராஜ்
இளவாலை.




## குழந்தை வளர்ப்பு முறை

எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் பயிற்சிப் பாசறை குடும்பம். குடும்பம் என்ற வார்ப்பு எவ்வாறு அமைகிறதோ, அவ்வாறே அங்கு தோன்றி வளரும் பிள்ளைகளும் தம் குண அமைப்பைப் பெறுவர். இதனால் குடும்பம் எவ்வாறு அமையவேண்டும். அங்குள்ள குழந்தைகளை வளர்க்கும் முறையென்ன என்பது பற்றி சில சிந்தனைக் கதிர்களைச் சிதறவிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### 1. பாராட்டுதல் நல்ல பலனைத் தரும்:

நாம் வீட்டில் பிள்ளைகளை எதற்கும் தண்டிக்கத் தயாராயிருக்கிறோம். கண்டித்து குறைகளைச் சுட்டிக் காட்டப் பின்வாங்குவதில்லை. ஆனால், பிள்ளைகள் உண்மையாகவே நல்ல செயல்களைச் செய்யும் போது பாராட்டுகிறோமா...?

இருப்பினும் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க உரிய நேரத்தில் உளமாரப் பாராட்டுதல் அவசியமானது. ''அதிகமாகப் பாராட்டு, குறைவாகக் குற்றஞ் சாட்டு. இதுவே சிறுரை சீராக வளர்க்கச் சிறந்த வழிகாட்டி'' என அறிஞர் பெரி மொழிந்துள்ளார்.

ஒரு சிறுமி தன் படுக்கையில் அழுதுகொண்டிருந்த குரலொலி தாயின் செவிக்கு எட்டியது.

''ஏன் அழுகிறாய்'' எனத் தாய் வினவினாள். ''நான் இன்று நல்ல விதமாக நடந்து கொள்ளவில்லையா ?'' எனச் சேய் கேட்டாள் பிள்ளையின் இச்சொற்கள் தாய்க்குப் பெரிய வேதனையைக் கொடுத்தது. ''மகள் ஏதாவதொரு தவறு செய்யும்போது ''தொண'' ''தொண'' வென்று கடிந்து கொண்டிருக்கிறேன். ஆனால், பிள்ளை உண்மையாகவே தவறுகளை நீக்கி நல்லவளாக முயற்சிக்கும்போது ஒரு நல்ல வார்த்தை முதலாய் கூறி உற்சாகப்படுத்தத் தவறிவிட்டேன். குற்றஞ் சாட்டும் போது பொறுமையாய் இருந்த குழந்தை நல்லதைச் செய்யும்போது நியாயமான பாராட்டுதலை எவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்து ஏங்கியிருக்கும்'' என்று சொல்லித் தாய் தன்னையே நொந்து கொண்டாள்.

அன்றாடம் வேலை காரணமாக பலரோடு பழகும் போது எங்கு நல்ல பண்பைக் கண்டாலும் சுருக்கமாக, ஆனால், உளமாரப் பாராட்டுவது நல்ல பலனை விளைவிக்கும். பாராட்டுபவரும் நல்ல மதிப்பையும் வரவேற்பையும் பெறுவார். பாராட்டப்பெற்றவரும் புது உற்சாகத்தோடு மேலும் நல்ல பல அலுவல்களில் ஈடுபட முயற்சிப்பார். நல்லவற்றைச் செய்வதினால் ஏற்பட்ட சோர்வு ஒரு சிறு பாராட்டுதலினால் முற்றிலும் நீங்கிவிடும்.

கட்டுப்பாட்டையும் நல்ல பண்புகளையும் பிள்ளையிடம் வளர்ப்பதற்கு மிகச் சிறந்த சாதனம் சரியான நேரத்தில் உரிய பாராட்டுதலை அவர்களுக்குத் தெரிவித்தல். சிரமப்பட்டுச் செய்யும் நல்ல செயல்களுக்கு நியாயமான பாராட்டுதலைப் பெறுவது மனிதனது செவிகளுக்கு இனிமையானது. உளத்திற்கு வளத்தையும் ஊக்கத்தையும் தரவல்லது.

பிள்ளைகள் பெற்றோரின் பாராட்டுதல் என்ற, தூண்டு கோலினால் மேலும் அதிக நற்செயல்களைச் செய்ய முனைகிறார்கள்.

அடிக்கடி நியாயமான பாராட்டுதலைப் பெறும் பிள்ளை தன்னம்பிக்கையையும் மனப்பக்குவத்தையும் பெறுகின்றது. புதுப்புது பிரச்சினைகளையும் சவால்களையும் சந்தித்து சமர்புரியும் தகுதியையும் திறத்தையும் அடைகின்றது. இத்தகைய பிள்ளைகள் தம் கௌரவத்திற்கு இழுக்கு வருவிக்கக்கூடிய இழிச்செயல்களை விட்டுவிடுவர்.

சில பெரியவர்கள் இத்தகைய நல்ல வார்த்தைகளைச் சொல்லத் தயங்குகிறார்கள். நமது பாராட்டு சிறுவனுக்குத் தலைக்கனத்தைத் தந்துவிடுமோ என ஐயப்படுகின்றனர். நிச்சயமாக முறையான நல்ல வார்த்தை நிறைவாக நல்ல பயனைத்தான் விளைவிக்கும் என்பதை எல்லா அறிஞரும் பெரியோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

பெற்றோர் ஏன் இவ்வழியைப் பயன்படுத்தி தம் குழந்தைகளின் வாழ்வை அற்புதமாக மாற்ற முயற்சிக்கக்கூடாது !

(தொடரும்)
நன்றி—தோழன்

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## பெரிய இறைவாக்கினர்கள்
## இசையாஸ்—III

(அதிகாரங்கள் 56—66)

இது இசையாஸ் ஆகமத்தின் கடைசிப் பகுதியாகும். 56 தொடக்கம் 66 வரையிலான அதிகாரங்களை உள்ளடக்கி நிற்கின்றது. இதனை வரைந்த இறைவாக்கினரை மூன்றும் இசையாஸ் என நாம் அழைக்கின்றோம்.

இப்பகுதி, இஸ்ராயேல் மக்கள் பாபிலோனியாவிலிருந்து விடுதலையடைந்து, தம் தாய் நாடு திரும்பிய பின்னரே (538. கி. மு) எழுதப்பட்டது. சில ஆராய்ச்சியாளர்கள் இதற்கு இன்னும் பிந்திய காலத்தைக் கொடுக்கின்றனர்.

காலம் எதுவாக இருப்பினும், இதன் செய்தி திண்ணமாக ஒலிக்கின்றது. மீண்டும் தமது நாட்டை வந்தடைந்த மக்கள், புனிதம் பொங்கும் புதிய யாவேயின் மக்களாக இருக்க வேண்டும். அதற்கேற்ற வழிமுறைகள் அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது இப்பகுதி.

தாய் நாட்டின் புதிய தலைவர்கள், புதுப்பிக்கப்பட்ட ஜெருசலேம் தேவாலயம், ஓய்வு நாள் நோன்பைக் கடைப்பிடித்தல், செபவாழ்வு, ஒழுக்கநெறி, வழிபாட்டு முறைகள் போன்ற முக்கிய கருத்துக்கள் பற்றிப் பேசி, அவற்றைச் சரியான முறையில், கடுமையாகக் கடைப்பிடிக்கக் குரல் கொடுக்கின்றது. இப்பகுதி நல்லவர்களுக்கு ஆறுதல் மொழியும், தீயவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கையும் தருகின்றது. இறைவாக்கினரின் புத்தகங்களில் சிலைவழிபாட்டைக் கண்டித்துக் கொடுக்கப்பட்ட கடைசிக் குரலை இங்கு காண்கின்றோம்.

கடைசியாகத், தூய, புதிய ஜெருசலேம் பற்றி இங்கு கூறப்படுகின்றது. இது, திருச்சபையையும், விண்ணக வாழ்வையும் குறித்து நிற்கின்றது என்பதை இங்கு குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

அடுத்த இதழில், இறைவாக்கினர்

ஜெரேமியாஸ்!

இரா. சூசைநாதன்.

அறிந்துகொள்ளுங்கள் 43

## பாஸ்கு அல்லது கடத்தல்

வாதைகளின் முடிவில் விவிலியம் பாஸ்கு விழாவைப் பற்றியும் அதன் ஒழுங்குவிதிகள் பற்றியும் பேசுகிறது (யாத் 12: 1-51) இறுதிவாதை எகிப்தியரின் தலைப்பேறுகள் இறப்பதாகும். இந்த வாதையிலிருந்து இஸ்ராயேல் மக்கள் காப்பாற்றப்பட இறைவன் மோயீசன் மூலம் கட்டளை கொடுக்கிறார். ஒரு ஆட்டுக்குட்டியை வெட்டி அதன் இரத்தத்தை வீட்டு நிலையில் தெளிக்கவேண்டும். வாதையின்போது இறைத்தூதன் அவ்வீடுகளைக் கடந்து போனார்.

மோயீசன் கட்டளைப்படி இஸ்ராயேல் மக்கள் கொண்டாடிய இவ்விழா மிகவும் பண்மையானதாகும். தொடக்க காலத்தில் இது நாடோடி மக்களின் (செமித்தியரின்) இளவேனிற்காலச் சடங்காக இருந்தது. இச்சடங்கில் குருக்களோ பீடமோ இடம் பெறவில்லை. இதில் குருதி சிறப்பாகப் பயன்பட்டது. புதிய மேய்ச்சல் நிலம் தேடிச்செல்லும் போது இடையர்கள் கூடாரங்களைப் பிரித்துவிட்டு இவ்விழாவைக் கொண்டாடினர்.

சில ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி ஆடுகள் பெருகுவதற்கு இச்சடங்கு நடந்திருக்கலாம், கூடார நிலைகளில் தெளிக்கப்பட்ட குருதி பகையான தீயசக்திகளிலிருந்து காப்பாற்றுவதாகக் கருதப்பட்டது. இவ்விழா கீழ்நாட்டு இளவேனிற்கால இடையர்விழா.

இப்பழையவிழாவைச், சடங்கை இஸ்ராயேல் மக்களின் வரலாற்றின் தலையான கட்டத்தில் மோயீசன் பயன்படுத்துகிறார். இந்த நாடோடிகளின் இளவேனிற்கால விழா இஸ்ராயேல் மக்களின் விடுதலையையும் மீட்பையும் குறிக்கும் விழாவாக இஸ்ராயேல் மக்களின் எல்லாத் தலைமுறையினரும் நினைவு கூர்ந்து கொண்டாட வேண்டிய விழாவாக உயர்கின்றது.

நிசான் மாதம் பதினான்காம் நாள் மாலை ஒருவயதுள்ள செம்மறியாட்டுக்கடா ஒன்றை வெட்டி (யாத் 12; 3-8) அதன் இரத்தத்தை வீட்டுக்கதவுநிலையில் பூசி எலும்பு முறியாது அதைச்சுட்டுக் கசப்பான கீரையுடனும், புளியாத அப்பத்துடனும் அவசரமாக உண்ணவேண்டும். உண்ணும்போது இடையை வரிந்து கட்டி காலில் மிதியடி அணிந்து கையில் கோலைப் பிடித்து உண்ணவேண்டும் அதாவது பயணத்துக்குப் புறப்படத்தயாராக இருப்பதுபோல் தப்பி ஓடத்தயாராக இருக்கவேண்டுமென்பது மோயீசன் கட்டளை. இந்நாள் நினைவு கூரவேண்டிய நாள். அதை உங்கள் தலைமுறைதோறும் ஆண்டவருடைய திருவிழா என்று கொண்டாடி வரக்கடவீர்கள். (யாத் 12: 14)

இ. ம. ஜெயசீலன்

## இறைவாக்கினரும் சமுதாயமும்

நிறமின்றி மலரில்லை, உருவமின்றி உடலில்லை, உறவின்றி வாழ்க்கையே இல்லை. இந்த உறவின் அடிப்படையிலே எழுந்ததுதான் சமுதாயம். வாழ்வு வளருவதற்கு சமூக நிறுவனங்கள் பெருமளவில் உதவுகின்றன. இதன் அடிப்படையில் இன்றைய சமுதாயத்தை உற்றுநோக்கினல் சமுதாய நிறுவனங்கள் யார் வாழ உதவுகின்றன என்பதைக் காணலாம். குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக் காம்புகள் எத்தனை? ஏழை எளியோரை ஏமாற்றிச் செல்வம் சேர்ப்போர் எத்தனைபேர்? நீதி மன்றங்களில் கையூட்டுப் பெற்று அநீதியை நடமாடச் செய்பவர் எத்தனை பேர்? ஏழைகளைப் புறக்கணித்து அவர்களைச் சமுதாயத்தில் மேலெழுப்பாது ஏழ்மையிலேயே புரளச் செய்பவர் எத்தனை பேர்? உலக இன்பங்களிலே மூழ்கி அதனையே வாழ்வின் இறுதிப் பொருளாக எண்ணி வாழ்பவரும் எத்தனை பேர்? இதுதான் இன்றைய சமுதாயத்தின் நிலை. எடுத்துரைப்பார் எவருமில்லை. எதிர்த்து நிற்பார் யாருமில்லை. எதிர்த்து நின்று எடுத்துரைத்தால் தம் நலம் பாதிக்கப்படுமென்று பெட்டிப் பாம்புகள் போல் மறைந்து வாழ்வோர் பலர். இத்தனை அநீதிகளையும் தட்டிக்கொடுத்துக் கட்டி அணைப்பார் இன்னும் சிலர். உள்ளக் குமுறல்களையெல்லாம் அடக்கி வைத்து வாய் பேச முடியாத குழந்தைகள்போல் தவித்துக் கொண்டிருப்பார் வேறு சிலர். ஆனல் உள்ளதை உள்ளவாறேஎடுத்துச் சொல்லி அதனல் தனக்குவரும் துன்பத்தையும் பொருட்படுத்தாது, நீதியை நிலை நாட்டுபவனே இறைவாக்கினன்.

பனித்துளியுடன் உறங்கிக் கிடக்கும் மலர் மொட்டுக்களைத் தட்டியெழுப்பி மலர வைக்கும் சூரிய ஒளிபோல, சோர்ந்து நலிந்த உடலுக்கு உணவூட்டிச் செயல்படவைக்கும் சத்துள்ள உணவைப்போல உறங்கிக் கிடக்கும் தனிமனித, சமுதாய வாழ்வில் நுழைந்து, பொய்மையையும், அநீதியையும், உணர்த்தி அன்பு வாழ்வு வாழ அறை கூவல் விடுத்த வீரர்களே இறைவாக்கினர். இந்த இறைவாக்கினரின் பணி இறைத்திட்டத்திற்குட்பட்ட பணியாகும். மக்கட்குல நல்வாழ்விற்கு ஒப்பற்றதோர் திட்டம் தீட்டி அதைச் செயல்படுத்த ஒரு மக்கட் குலத்தைத் தெரிந்தெடுத்தார் இறைவன். தான் தெரிந்தெடுத்த இம்மக்களுடன் உடன்படிக்கை மூலம் உறவு பூண்டார். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளாக இருப்பவை கடவுள் அன்பும், பிறர் அன்பும். இவ்வன்பால் மனிதன் கடவுளோடும் மனிதரோடும் நெருங்கிய உறவு கொண்டு வாழ அழைக்கப்பட்டான். இஸ்ராயேல் மக்களோ சமுதாய உணர்வை மறந்து உறவுகளை முறித்து வாழ்ந்தனர். கி. மு. 8 ம் நூற்றுண்டிலே சமுதாயத்தின் நிலை சீரழிந்து கொண்டு போயிற்று. இந்நிலை கண்ட இறைவாக்கினர் அதை இடித்துரைத்துத் திருத்த முன் வந்தனர்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 2<br>சுடர்: 17 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### அன்பு விழியின் அன்புக் குரல்:

அன்புக் கண்மணிகளே !

உங்கள் செவிகளுக்கு, திக்கெட்டுமிருந்து வரும் ஒலிகளுக்கிடையே என் அன்புக்குரல் கேட்கிறதா! நிச்சயம் கேட்கும் என்று நம்புகிறேன். விளையாட்டுப்போட்டிகள் பல பாடசாலைகளில் நடைபெறுகின்றன, இப்போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களை வீராங்கனைகளைப் பற்றிப் பலர் பாராட்டிப் பேசலாம். அவ்வீரர்களில் ஒருவராக நீங்கள் இருந்தால் உங்கள் உளப்பாங்கு எப்படியிருக்கவேண்டும் என்பதை உங்களுக்கு அறியத்தருகிறேன்.

i) வெற்றியிலும் இறுமாப்புக் கொள்ளக்கூடாது.
ii) வெற்றியில் தன்னடக்கம் கொள்ளவேண்டும்.
iii) தன்னை உருவாக்கிய ஆசானை மதித்து நடக்கவேண்டும்.
iv) எப்பொழுதும் சுயநலத்தை விடுத்து தன்னணியின் உயர்வுக்காகவே உழைக்கவேண்டும்.


★ எல்லாவற்றிற்கும் மேலாக எம்மைப் பேணிக் காத்துவரும் இறையேசுவுக்கும் எம் பெற்றோருக்கும் என்றும் பணிவுள்ள கண்மணிகளாக வாழவேண்டும்.

தோற்றவர்கள், இதோ உங்களுக்கும் சில அறிவுரைகள்:

i) தோல்வியைக் கண்டு துவண்டுவிடாதீர்கள்.
ii) தோல்விக்காண காரணத்தைக் கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யுங்கள்.
iii) தோல்வியால் விழிப்படைந்து, வீரவரலாறு படைத்த புனிதர்கள் வரலாறுகளைத் தேடிப்படிக்கத் தவருதீர்கள்.

★ ★ ★

### படிப்புதிர் 3.




1ஆம் படியில் இருப்பது பறப்பது.

2ஆம் படியில் கொடையுண்டு.

3ஆம் படியில் இறைவன் இருக்கிறர்.

4ஆம் படியில் உலோபி இருக்கிறன்.

5ஆம் படியில் மீட்பு உண்டு.

6ஆம் படியில் குறள் வெண்பா உண்டு.

★ மூன்று படிப்புதிருக்கான விடைகளை ஒரு தாளில் அல்லது தபால் அட்டையில் எழுதி 20-7-88ஆம் திகதிக்குமுன்

படிப்புதிர்
காவலன் கண்மணிகள்,
த. பெ. எண்: 2,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.
அங்கத்துவ எண்ணைக் குறிப்பிடத்தவற வேண்டாம்.

i) 'ஆ' பத்துகள் ii) சிலுவைப்புதிர் விடைகள் அடுத்த வாரம் வரும்.
சரியான விடைகள் எழுதியவர்களின் பெயர்கள் 22-7-88இல் வரும்.

அங்கத்துவம் பெற விரும்புவோர் விடைகளுடன் பெயர் பாடசாலை, ஆண்டு ஆகியவற்றைத் தந்தால் உங்களுக்கு அங்கத்துவ எண் தரப்படும்.

### அறிவோம் ! ஆற்றுவோம் !!

திருத்தந்தையின் நற்செய்திப் பணிக்கு உதவும் சபைகள்: விசுவாச பரப்புதல்சபை, புனித இராயப்பர்சபை, திருப் பாலத்துவசபை என்னும் மூன்றுமாம். இவைகள் மட்டில் நமது கடமைகள் மூன்று: எங்கும் பரவவேண்டுமென்று செபிப்பது; அதே கருத்து நிறைவேறத் தியாகம் செய்வது; அதைச் செயல் முறையில் காண்பிக்கும் வகையில் காணிக்கை கொடுத்து உதவுவது ஆகும். இவைகளைத் தவிர சமயாசமயங்களில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நம் திருச்சபை பல்வேறு தேவைகளுக்காகத் திரட்டப்படும் நிதிகளுக்கு உதவுவதும் நம் கடமை.

நன்றி: மோட்சபாதை

## எழுதிச் செபியுங்கள் போட்டி-17

''இன அழிப்பை ஊக்குவிக்கும் குடியேற்றங்களை அரசு கைவிட'' ஒரு செபம் எழுதி 25-7-88க்கு முன் பாதுகாவலன், தபாற்பெட்டி இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள், சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 25. பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 5-8-88 அன்று பாதுகாவலனில் வெளிவரும்.

## எழுதிச் செபியுங்கள் போட்டி-16
### பரிசுபெறும் செபம்

''தமிழர் தாயகத்தைச் சிங்களவர் மதிக்க'' செபம்

இரக்கமுள்ள யேசுவே இந்த நாட்டிலே தமிழராகிய நாங்கள் பாரம்பரியமாக வசித்துவரும் எங்கள் ஈழத் தாயகம் நாளுக்குநாள் பறிக்கப்பட்டு ஆட்சியாளர்களினால் சிங்களமயமாக்கப்படுவதை திருக்கண்ணோக்கிப்பாரும்.

எமது சிங்களச் சகோதரர்கள் எமது தாயகத்தை மதித்து எமது உரிமையை எங்களுக்குத் தருவதற்கு ஆட்சியாளர்களைத் தூண்டவும் அவர்களும் அதை ஏற்றுக்கொள்வதற்கும் வேண்டிய நல் மனதை அவர்களுக்குக் கொடுத்தருளும்.

அன்பின் தந்தையே! பார்வோனின் கொடுங்கோன்மையிலும் எகிப்தின் அடிமைத்தனத்திலும் நின்று இஸ்ரவேல் மக்களை மீட்டு இரட்சித்து கானான் தேசத்தை அவர்களுக்கு உரிமையாக்கியதுபோன்று சிங்களக் கொடுங்கோன்மையிலும் அடக்குமுறையிலும் இருந்து எங்களைக் காத்து எங்கள் தாயகத்தை எங்களுக்கு மீட்டுத் தந்தருளும். இந்த நாட்டிலே சிங்களவர்ளும் தமிழர்களும் ஒருவர் ஒருவருடைய உரிமையை மதித்து அன்பாகவும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ அருள்புரியவேண்டுமென்று உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.

பரிசு பெறுபவர்:— பி. வசந்தா குரூஸ்
முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, முருங்கன்.

பாராட்டுப் பெறுவோர்

மட்டுநகர் மரியதிரேசா ஜோசப், தேத்தாப்பளை எஸ். நிஹால் டென்சில். கல்முனை சங். சகோ. ச. அருளப்பா.

ஓமந்தை மரிய பற்றி இராயப்பு. வங்காலை செ. மொறின் யூக்கறிஸ்ரா, செபமாலை மேரி அன்ரனிற்று.

உருத்திரபுரம் சூசைதாசன் ஞானஒளி, அந்தோனிப்பிள்ளை கரோலின் கமலி. மயிலிட்டி பீ. ரூஜேஸ்வரி.

புங்குடுதீவு லீனஸ் சகாய ரூபன், அமிர்தராசா ரூபியா.

சுன்னாகம் அதிசயமலர் அருள்பிரகாசம். மிருசுவில் மடோனா செல்வராஜன். பலாலி அ. வில்லி பற்றிமா,

அல்லைப்பிட்டி அ. ஜெயசோதி, பாக்கியநாதன் றெஜினா காந்தினி, ஞா. மொணிக்கா, அ. றெஜினி, பா. உதயநாதன், சுவாம்பிள்ளை தவராணி, ப. நொய்லின் ஜெனிற்று.

இளவாலை யோசவ் கிறிஸ்ரி பிரான்சிஸ், ஏ. மைக்கல் கொலின்ஸ், நிர்மலா டேவிற், சுவீற்று வெலீசியா இம்மனுவேல் மேரி டெல்சியா சேவியர், ம. பற்றிக்குணசீலன். மேரிமலர் மரியாம்பிள்ளை, பெனடிக்ற் நித்தியா.

## இவ்வாரப் புனிதர்கள்

ஜூலை 11 புனித ஆசீர்வாதப்பர், மடாதிபர்,
ஜூலை 13 புனித ஹென்றி, அரசர்,
ஜூலை 14 புனித லெஸ்லிஸ் கமில்லஸ், குரு,
ஜூலை 15 புனித பொனவெந்தூர், ஆயர், மறைவல்லுனர்
ஜூலை 16 கார்மேல் மலைப்புனித கன்னிமரி.

## மரியாள் வணக்கம்-பொதுவான....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய தவறான அணுகு முறைகள் தவிர்க்கப்படல் வேண்டும். அடுத்ததாக, அன்னை மரியாளை நாம் எப்போதும் மீட்பராம் கிறிஸ்துவுடன் இணைத்தே பார்க்கவேண்டும். ஏனெனில் நமது விசுவாச வாழ்வில் நடுநாயகமாகத் திகழ்பவர் கிறிஸ்துவே. அவரது பாடுகள் மரணம், உயிர்ப்பு என்ற மறைபொருளில்தான் நமது கிறிஸ்தவ விசுவாசம் கட்டப்பட்டுள்ளது. இந்த மீட்பின் மறைபொருளை விளக்கிடும் வகையில் அதனுடன் இணைக்கப்பெற்றுத்தான் மரியாள் வணக்கம் வளரவேண்டும். இந்த உண்மையைத்தான் விவிலியமும் திருச்சபை மரபும் எமக்கு எடுத்துரைக்கின்றன. மரியாள் பெற்றுக்கொண்ட பெருமைகளெல்லாம் மீட்பராம் கிறிஸ்துவை முன்னிட்டு இறைவன் அவளுக்குத் தந்த சலுகைகளே. மரியாள் வணக்கமும் விசுவாசிகளாகிய எம்மை மீட்பராம் கிறிஸ்துவிடம் இட்டுச் செல்லவேண்டும். அன்னையின் வாழ்வில் ஒளிர்விட்ட சிறந்த பண்புகளும், மதிப்பீடுகளும் நமது வாழ்விலும் உருவம் பெற உதவவேண்டும். வாழ்வின் அன்றாடப் பிரச்சினைகளையும் சவால்களையும் இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கையோடு எதிர்கொள்ள நம்மை இட்டுச்செல்லவேண்டும். இவ்வாறு மரியன்னை வழியாக இறைவனை நாம் அடைய மரியாள் வணக்கம் உதவிட வேண்டும்.

அருள்திரு
யோ. கமிலஸ் நிமலன்
புனித பிரான்சிஸ் சவேரியார்
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,

தேனருவி:

ஆண்டின் 16ஆம் ஞாயிறு (17—07—88)

## அர்ப்பண உணர்வு

ஹீனன் என்ற பேராயர் தமது வைத்தியருடைய ஆலோசனைப்படி ஓய்வு எடுப்பதற்காக ஒரு கிராமப் புறத்திற்குச் சென்றார். அவர் அங்கு சென்று சில மணித்தியாலத்திற்குள் ஒரு தகவல் வந்தது. ஒரு கிறிஸ்தவன் திருச்சபையிலிருந்து விலகப் போகிறார் என அறிய வருகிறார். அது ஒரு சாதாரண கிறிஸ்தவன்தான். இருப்பினும் ஆயர் தமது ஓய்வை ஒதுக்கிவைத்து விட்டு உடனடியாகப் புறப்படுகிறார். அவனது விசுவாசத்தை உறுதிப்படுத்த தம் பங்களிப்பைச் செய்ய விரைகிறார். இந்த நிகழ்ச்சி ஆயரது பணிவாழ்வில் அவருக்கு இருந்த அர்ப்பண உணர்வை வெளிக் கொணருகிறது.

தொடர்ச்சியான வேலைப் பழுவினால் சோர்வடைந்த யேசுவும், சீடரும் இளைப்பாற வேண்டும் என்ற நோக்குடன் தனிமையான இடம் நாடிச் சென்றனர். அதே வேளை, அவர்களிலும் விரைவாக ஓட்டமும் நடையுமாக மக்கள் முந்தியடித்துக் கொண்டு இயேசு செல்லவிருந்த இடத்தை அடைந்தனர். ஏனென்றால் இயேசுவின் வழிகாட்டுதலில் அதிகம் தாகம் கொண்டிருந்தனர்.

''மக்கள் ஆயனில்லாத மந்தைகள் போல் இருக்கிறார்கள்'' என அவர் மக்கள்மீது அனுதாபப்படுகிறார். மக்கள் மட்டில் இயேசுவின் உள்ளத்தில் ஊறிய இரக்கம் அவரைப் பசி நோக்காது, கண் தூங்காது பல மணி நேரம் போதிக்கத் தூண்டுகிறது. பணி என்பது பட்டம், பதவிக்காகவோ, அன்றேல் சுயஇன்பத்திற்காகவோ நிகழ்த்தும் சில பூச்சாண்டி வேலைகள் அல்ல. மாறாக, மக்கள் தேவைகளை முன்னிட்டு, அவர்கள்வாழ்வினை வளம்படுத்த, தாராள மனமுள்ளவர்களின் அர்ப்பணிப்பே பணிவாழ்வாகும். பணியாளர் என்ற பெயர் கொண்டு பலர் சமூக சமய சேவையில் குதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தம்மை நம்பி வரும் மனிதர்களை, மேலும், மேலும் அடிமைகளாக்கி சுய நலன்களுக்காக விற்று விடுகிறார்கள்.

இறைவாக்கினர் எரேமியாசின் காலம் யூதாகுல வரலாற்றில், பெரும் நெருக்கடியின் காலகட்டம். இறைவனின் ஆயர்களாக அனுப்பப்பட்ட அரசர்கள், குருக்கள், வழிகாட்டிகள் அனைவரும் தான்தோன்றித் தனத்தில் மூழ்கியிருந்த காலம் அது. அவர்கள் ஊழல், லஞ்சம், மிரட்டல், ஏமாற்றம் என்ற சாக்கடையில் மிதந்தனர்.


''ஆடுகளைச் சிதறடித்துப் பாழாக்கும் ஆயர்களுக்கு ஐயோ கேடு'' என எரேமியாஸ் தலைவர்களது மேய்ப்புப் பொறுப்பினை இறைவாக்கினருக்குரிய துணிவோடு உணர்த்தினார்.

இன்று, மேய்ப்புப் பணியின் பொறுப்பைக் கொண்டவர்கள் ஆயரும், குருக்களும் மட்டுமல்ல; ஒவ்வொரு குடும்பப் பெற்றோரும், ஆசிரியரும், ஆளுனரும், அமைப்புகளில் தலைமை வகிப்போரும் இதிலடங்குவர். ஒவ்வொரு மனிதனும் அடுத்தவனில் தங்கி வாழ்கின்றனர் என்ற நிலைப்பாட்டில் ஒவ்வொரு மனிதனும் அடுத்தவனின் ஆயன் ஆகிறான். இன்று, வழிகாட்டுதலுக்கு பதிலாக வழிமாற்றுவதே தொழிலாகக் கொள்ளுகின்றனர் சிலர். இன்னும் சிலர் மேய்ச்சல் நிலத்தைக் காட்டுவதாக அழைத்து மந்தையையே மேய்ந்துவிடுகின்றனர். வேறு சிலர் கூட்டிச் சேர்ப்பதாக அணைத்து கூறுபோட்டுப் பலவீனமாக்கி விடுகின்றனர். எம் வாழ்வில், எமது பணிக்காக வேண்டி நிற்கும் 'மந்தைகளின்' தேவையை உணர்ந்து செயல்படுவோர் எம்மில் தங்கி நிற்போரைக் கருணையுடன் நோக்கி எம் ஆற்றலுக்கு ஏற்ப அர்ப்பண உணர்வுடன் தாங்கிக் கொள்வோம். அந்தஸ்து எதுவாயினும், செய்வதனைத்தும் பணியாகிட எமது அர்ப்பண உணர்வில் கொஞ்சம் வளர்வோம்.

சுவாமி ஜீவாபோல் அ. ம. தி.

எரே. 23: 1—6 ஆடுகளை ஒன்று சேர்த்துக் கண்காணிக்க புதிய ஆயர்களை ஏற்படுத்துவோம்
எபே. 2:13—18 ஒன்றாய் இணைத்த இயேசுவே நம் சமாதானம்.
மாற். 6: 30—34 ஆயனில்லா ஆடுகள் போல் இருந்ததால் அவர் மனமிரங்கினார்.

உயிர்த்த யேசுவுடன் இணைந்த
### 25ஆவது ஆண்டு நினைவு



யோசவின் தெரேசா
ஜெகநாதன் (லீலா)
இறைவனில் இளைப்பாறியது:
10-7-1963

இறைவா, லீலா இவ்வுலகில் வாழ்ந்த குறுகிய காலத்தில் நீர் அவருக்களித்த அருள் வளங்களுக்கெல்லாம் தேவரீருக்கு நன்றி கூறுகிறோம். எம் எல்லோருடனும் இவ்வுலகில் அவர் அன்பு பாராட்டி வாழ்ந்தமையை நினைந்து, தேவரீர் அன்னாருக்கு நித்திய சம்பாவனையை அளித்தருளவேண்டுமென்று இரந்து மன்றாடுகிறோம். சகல புனிதர்களுடனும் அவர் என்றென்றும் உம்மைப் போற்றி மகிமைப்படுத்துவாராக.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் 9-7-1988

### 2ஆம் ஆண்டு நிறைவு



இராசநாயகம் இரட்னராஜா
மலர்வு: 18-2-1948 மறைவு: 16-7-1986

ஒளி சிந்தும் தீபம் நீயானாய்
எம்விழிசிந்தும் நீரும் நீயானாய்

16-7-88 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையச் செபிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்.

ராணி இல்லம்,
பத்தாவத்தை
இளவாலை. A/79

சனிக்கிழமை காலை 6-15க்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்புமறவாத
கணவன், பிள்ளைகள், தாயார், சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்.

## முதலாமிடம்

பாதுகாவலன் பத்திரிகை வாசனையை ஊக்குவிக்கும் பங்குகளில், அச்சுவேலி முதலாம் இடத்தில் உள்ளது அச்சுவேலிப் பங்கில் வாரம் தோறும் 240 பத்திரிகைகள் விற்பனையாகின்றன. பங்குத் தந்தை அருள்திரு. பேனாட் றெக்னோவுக்கும் பங்கு மக்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

### 1-ம் ஆண்டு நினைவு

இராயப்பு இராசரட்ணம்
மலர்வு 22-4-1019 உதிர்வு 10-7-1987

நெஞ்சம் மறப்பதில்லை
நெஞ்சமதில்நினைத்திருப்போம்
அன்பின் இறைவா!

அன்பு மணம் வீசி, பரிவு காட்டி, அரவணைத்து, தன் நிழலிலே எம்மை எல்லாம் ஒன்றாகத் தங்கவைத்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மறைந்துவிட்ட எம் தந்தை இராயப்பு இராசரட்ணம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் 10-7-88 ஞாயிற்றுக் கிழமை -30 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
பழைய வீதி,
ஆனைக்கோட்டை. A/81

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பொதுநிலையினர் சிறப்பாண்டு 1987

**பரிசில்களை யாழ். ஆயர் வழங்குகிறார்**



பொதுநிலையினர் சிறப்பாண்டை முன்னிட்டு யாழ். மறைவட்டப் பொது நிலையினரதும் குடும்பத்தினதும் ஆணைக்குழு, பாதுகாவலன் அனுசரணையுடன் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் மூன்றிடங்களையும் பெற்றவர்கள் யாழ். ஆயர் மேதகு. வ. தியோகுப்பிள்ளையிடமிருந்து முறையே தங்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும் காட்சி.

# பம்பாய் அதிமேற்றிராசனம் பொதுநிலையினர் பணிக்கு முக்கியத்துவம்

பம்பாய் அதிமேற்றிராசனம் மேற்கொண்டுள்ள புதிய திட்டத்தின் படி பொதுநிலையினர்பணிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை வகுத்த ஆணைக்குழுவின் தலைவரான பிதா லெஸ்லி றேட்டஸ் தலத் திருச்சபை தனது பணியைப் புதுப்பித்து வலுப்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

500,000 கத்தோலிக்கர் வாழும் இம் மறைமாவட்டத்தில் 118 பங்குகள் உள. இங்கு 28 பொது நிலையினர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 300 மறைமாவட்டக் குருக்களும் 260 துறவறச் சபைக் குருக்களும், 113 துறவிகளும், 1500 கன்னியரும் இங்கு பணி செய்கின்றனர். 82 துறவறச் சபைகளைச் சேர்ந்தவர்கள் இவர்களுள் அடங்குவர். இச்சபைகளுள் 61, பெண்களது சபைகளாகும்.

பொது நிலையினரின் பணி பற்றிய ஓர் ஏடு தற்போது தயாரிக்கப்படுகிறது. அத்துடன் குருக்களுக்கும் பொதுநிலையினருக்கும், திருச்சபையையும் அதன் பணிகளையும் பற்றிய உணர்வை ஏற்படுத்த தீவிரப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இம் மறைமாவட்டத்திலுள்ள கல்வி நிலையங்கள் 137 உயர்நிலைப் பாடசாலைகள், 32 ஆரம்ப பாடசாலைகள், 11 தொழில் உயர்கல்வி நிறுவனங்கள், 18 தொழில் நுட்பப் பாடசாலைகள், மூன்று பல்துறை பயிற்சி நிறுவனங்கள், ஒன்பது வர்த்தகக்கல்லூரிகள், வலது குறைந்தோருக்கான 11 நிறுவனங்கள் ஆகியனவாகும்.

மேலும் இம் மறைமாவட்டம் 14 மருத்துவ சாலைகள் 44 மருத்துவ நிலையங்கள், ஒன்பது தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றையும் நடத்தி வருகிறது. சமூக நலனுக்காக 14 சனசமூக நிலையங்கள், 46 அனாதை இல்லங்கள், 13 வயோதிபர் இல்லங்கள் ஆகியனவும் நடத்தப்படுகின்றன.

## உருவப்படம்



மக்களின் அஞ்சலிக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் வைக்கப்பட்ட பிதா சந்திராவின் உருவப்படம்.

## மறைப்பணியாளர் மீது துப்பாக்கிச்சூடு

பீகாரில் கயா மாவட்டத்திலுள்ள ஜெகனபாத் பங்கில் இரு மறைப்பணியாளர்கள் ஜீப் ஒன்றில் பிரயாணம் செய்யும் போது தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காயினர். பிதா அகஸ்தீன் கடுக்கமக்கேல், பிதா ஜோர்ஜ் ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று தீவிரவாதிகளால் பின்தொடரப்பட்டனர். திறந்த வெளியில் ஜீப் சென்று கொண்டிருந்த போது அவர்கள் ஜீப்பை நோக்கிச் சுட்டுவிட்டு தப்பிச் சென்று விட்டனர். காயமடைந்த இரு குருக்களுக்கும் பாட்னா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இத்தீவிரவாதிகள் பிரஹமி சேனைவைச் சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது. நக்சலைட்டுகளையும் பிற இயக்கங்களையும் எதிர்ப்பதற்கு நிலச்சுவான்தார்களால் உருவாக்கப்பட்டவர்களே இவர்கள்.

# இந்தோனேசியாவில் மரியாளின் ஆண்டு நிறைவு

## செலவில் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றுள்ளது

இந்தோனேசியாவிலுள்ள புளோறஸ் தீவில் ஆடி 24-30ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மரியாளின் ஆண்டுநிறைவு விழாவில் சமய விவகார அமைச்சர் முனவீர் சட்சாலி கலந்துகொள்ளவிருக்கிறார். இவ்விழாவில் திருவழிபாடுகள், திருநிலைப்படுத்தல்கள், மரியாளைப்பற்றிய கருத்தரங்குகள், கண்காட்சிகள் முதலியன இடம் பெறும். புளோறஸ் தீவு கத்தோலிக்கர் பெருந்தொகையாக வாழும்ஒரு பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இவ்விழாவிற்கான செலவின் ஒரு பகுதியை அரசாங்கம் ஏற்றுள்ளது. ஏனைய செலவினங்கள் தனியார் நன்கொடைகள் மூலம் சேர்க்கப்படும் என இந்தோனேசிய ஆயர் பேரவையின் நிறைவேற்றுச் செயலாளரான பிதா காட்டஸிஸ்வயா கூறியுள்ளார். நூசா, தெங்காரா மாநிலத்தைச் சேர்ந்த ஏழு மறைமாவட்டஆயர்களும் இவ்விழாவைப் பொறுப்பேற்றுள்ளனர்.

## வெடிவிபத்துபற்றி கருதினல் கோடீரோ

அண்மையில் இஸ்லாமாபாத் — ராவல்பிண்டி நகரங்களில் ஏற்பட்ட பயங்கரமான வெடிவிபத்துக்கள் குறித்து கராச்சி பேராயர் கருதினல் கோடீரோ வருத்தம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பிரதமருடைய கட்டளைப்படி இது குறித்து விசாரணை நடத்தப்பட்டால் எதிர்காலத்தில் அப்பாவி மக்கள் அநியாயமாக உயிரிழப்பதைத் தடுக்கலாம் என அவர் நம்புகிறார்.

ஏப்ரல் 10ம் திகதி இஸ்லாமாபாத் — ராவல்பிண்டி என்னும் இரட்டை நகரங்களை இரண்டு மணித்தியாலங்களாக அதிரச்செய்த வெடிவிபத்துக்கள்பற்றியே அவர் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆயுதக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் சிதறிய ஏவுகணைகளும், உந்துகணைகளும் பல விடங்களிலும் வெடித்து 200 பேரின் உயிரைக் குடித்ததுடன் 1500 பேரைக் காயப்படுத்தின. ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவர் திருப்பலிக்குச் சமூகமளிக்கும் நேரத்தில் தான் இவ்விபத்து நடந்தது. சில ஆலயங்கள் கடுஞ்சேதமுற்றதாகவும் அறியப்படுகிறது. உருது நிகழ்ச்சியொன்றை ஒலிப்பதிவு செய்துகொண்டிருந்த ஒரு கலையகம் நாசமாகியதுடன் தொழிலாளர் ஒருவரும் கொல்லப்பட்டார். லாகூர் த்தேகாலிக்க ஒலிபரப்பு சங்கத்தின் இயக்குநரான பிதா யூசவ் டொமினிக் பாதிக்கப்பட்டோருக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

## தென் அமெரிக்காவில் புனிதர் பட்டம்

1626ம் ஆண்டில் வேத சாட்சிகளாக மரித்த மூன்று யேசுசபைக் குருக்களுக்கு பரகுவேயில் புனிதர்பட்டம் கொடுக்கப்படவிருக்கிறது. முத். பெற்ற பிதா றேக் கொண்சால்வேஸ் சாந்தக்குரூஸ், அல்பொண்ஸஸ் ரொட்றிகஸ், ஜோண் டெல் கஸ்தில்லோ ஆகியோரே இவர்கள்.

இவர்கள் தென் அமெரிக்காவில் செவ்விந்தியர்களுக்கு குடியிருப்புகளை அமைத்து விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றை முதல்முதல் கற்றுக்கொடுத்தவர்களாவர். இப்புதிய சமூக அமைப்பின் மூலம் பல்வேறு அடக்குமுறைகளிலிருந்து மக்களுக்கு விடுதலையளித்தனர்.

# தேசிய வார ஏடு வெளியீட்டுக்கு ஒரு குழு நியமனம்

இந்தியாவில் ▓▓ திருச்சபை ஆலோசனைச்சங்கம் ஒரு தேசிய வார ஏட்டை வெளியிட ஒரு குழுவை நியமித்துள்ளது. இந்திய கத்தோலிக்க வெளியீட்டுச் சங்கத்தின் தலைவரான வண. கலாநிதி ஜோண் வள்ளமட்டம் அவர்களின் தலைமையில் 17 பேரைக் கொண்ட இக்குழு இயங்கி வருகிறது. இவர்கள் ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொது நிலையினர் எனப் பல தரப்பட்டவர்கள்.

தேசிய அலோசனைச்சங்கம் சென்ற ஆண்டு சென்னையில் கூடியபோது இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு செயற்குழு நியமிக்கப்பட்டது. இந்த செயற்குழுவே ஏப்பிறல் 23ஆம் திகதி கோட்டயத்தில் கூடியது. ஆயர் பேரவையின் அலுவலர்களும் 11 பிற அங்கத்தவரும் இக்குழுவில் அடங்குவர்.

## நூரளையில் சிரமதானம்

18.06.1988 நுவரெலியா கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் ஒழுங்கு-செய்யப்பட்ட ஒருநாள் சிரமதானமொன்று நுவரெலியா அரசாங்க வைத்தியசாலையில் நிறைவுபெற்றது. சுமார் 20 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்ட இச்சிரமதானத்தில் பல வாட்டுகள் சுத்தப்படுத்தப்பட்டதுடன் பூந்தோட்டங்களும் பராமரிக்கப்பட்டன. இறுதியாக வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்துக்கு நன்றியுரை கூறியதுடன் மாலை 4.30 மணியளவில் இச்சிரமதானம் முடிவுற்றது.

தகவல்:
ச. வின்சன்ற், தலைவர்

## கிறிஸ்தவ வைத்தியசாலைமீது வெடிகுண்டுத் தாக்குதல்

பீகாரிலுள்ள மொக்காமா என்னுமிடத்தில் மே 5ஆம் திகதி நசரேத் வைத்தியசாலையில் நிகழ்ந்த வெடிகுண்டுத் தாக்குதலில் ஆறுபேர் படுகாயமுற்றனர். இவர்களுள் ஒருவரான திரு. நாகோ யாதவ் கவலைக்கிடமான நிலையில் உள்ளார். சுமார் எட்டுப்பேர் கொண்ட ஒருகூட்டம் வைத்தியசாலை வளவில் ஒளித்திருந்து தாங்கிக் கொண்டிருந்த திரு. யாதவ்மீது வெடிகுண்டுகளை வீசியதாகக் கூறப்படுகிறது.

குண்டுவெடிப்பும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டு அச்சம் கொண்ட நோயாளரும், வைத்தியசாலை ஊழியரும் பாதுகாப்பிடம் தேடி ஓடினர்.

250 கட்டில்களைக்கொண்ட நசரேத் வைத்தியசாலை 1947ல் நிறுவப்பட்டு அன்புக் கன்னியரால் நடத்தப்பட்டுவருகிறது.

## 'எம் கருத்து'க் குறள் தெளிவுரை

செயலில் வலிமையும், தன் வலிமையையும், பகைவனுடைய வலிமையும், இருவர்க்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு யூலைமாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்